
பராபவ ஹி புரட்டாசி மீ
செப்டம்பர் - அக்டோபர் 2026

மலர்: 9
இதழ்: 6

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

தேஸிக ஸந்தேஸம்



MONTHLY NEWSLETTER FROM:
SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM
MYLAPORE, CHENNAI - 600 004.
: +91 77086 53799 ☎ : 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com

SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM'S

New Multi-purpose Facility

(Ground Floor)



Sri Vedantha Desikar Devasthanam's **'Kamala Thothadri Hall',** a new Multi-purpose Facility for conducting **small functions, upanyasams, music programmes,** etc., available for rent at No. 25/13, Chitrakulam South Street, Mylapore, Chennai - 600 004.





Further details can be had at the temple office.

+91 77086 53799,

☎ : 044-24953799,

044-43863747.

பராபவ வரு புரட்டாசி மீ
செப்டம்பர் - அக்டோபர் 2026

ஸ்ரீ:

மலர்: 9
இதழ்: 6

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

தேஶிக ஸந்தேஶம்

திருக்கோவில் பூஜா காலங்கள் *

ஞாயிறு முதல் புதன் வரை			வியாழன் முதல் சனி வரை		
6.30	-	விச்வரூபம்	6.00	-	விச்வரூபம்
8.30	-	திருவாராதனம்	7.30	-	பொது தரிசனம்
9.45	-	சாற்றுமுறை			

காலை

12.00 - உச்சிகாலம்

மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

தர்மகர்த்தாக்கள்:

ஸ்ரீ ***L.N.*** ஸ்ரீநிவாஸன் | ஸ்ரீ ***P.*** ஸ்ரீஹரி | ஸ்ரீ ***N.*** கஸ்தூரிரங்கன்

Editorial Board :

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: M.K.S. Mohan Babu, P.S. Anand & N.V. Narayanan

Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை - 4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed by: ye**SK**ay designs



ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
மயிலாப்பூர், சென்னை - 600004.
: +91 77086 53799 ☎ : 044 - 24953799, 044 - 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:



ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்[3]ரி ஸமம் ஸ்தா[2]நம் ப்[3]ரஹ்மாண்டே[3] நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே[3]வோ ந பூ[4]தோ ந ப[4]விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

உத்தமமான புரட்டாசித் திருவோணத்தில் அவதரித்த ஓதாதோதும் வேதந்தார்யனிடம் பக்தி கொள்வதே நாம் அடையும் மோக்ஷத்திற்கு பரம்பரையான வழி என்பதை ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் தாமருளிய ஸப்ததி ரத்ன மாலிகை எனும் க்ரந்தத்தில் கீழ்க்கண்டவாறு ஸாதிக்கிறார்.

''வாதிஹம்ஸாம்புவாஹர் எனும் ஆசார்யரை அடைந்த ஸ்வாமி தேசிகனிடம் பக்தியில்லாதவர்கள் தர்சன ஸ்தாபகரான உடையவரின் கருணைக்கு வெகுதொலைவில் இருப்பார்கள்; அப்படிபட்டவர்கள் திருமாலின் கருணைக்கு இலக்காகார். அப்போது ஸ்வாமியிடம் பக்தியில்லாதவர்கள் மோக்ஷ சித்திக்கு தகுதியற்றவர்களாகி விடுவார்கள் என்பதை சொல்லவும் வேண்டுமோ!''

அந்த மஹாசார்யன் ஸாதித்த அநுஷ்டான க்ரந்தமான ஸ்ரீவைஷ்ணவ தினசரி எனும் நூலில் கடை பாசுரத்தில், ''பாகவதர்கள், பேரருளாளனுடைய அழகிய திருமேனியை த்யானம் செய்யும்போது ஆனந்தம்பெருகி, மனமுருகி, மயிர்க் கூச்செறிந்து, கண்விழி உள்ளே செருகிநிற்கப் பெறுவர். இத்தகைய ஆனந்த நிலையில் பேரருளாளன் திருமேனியின் த்யானத்தில் மூழ்கிக் கிடப்பதே யோகம் எனப்படும்'' என்று அறுதியிடுகிறார்.

''கெட்ட எண்ணம் கொண்டவர்களால் நினைக்கப்பட்டாலும் கூட, பகவான் கரிகிரி ஹரி அந்த நினைவின் மூலமே பாவங்களைப் போக்கி விடுகிறார். இது எப்படியென்றால், தெரியாமல் தொட்டு விட்டாலும் நெருப்பு சுட்டு விடுவது போல, ஹரியின் நினைவும் தன் இயல்பான தன்மையால் பாவங்களை அழித்து விடும். காற்றின் துணையுடன் கிளர்ந்தெழும் நெருப்பு, காட்டையே முழுவதுமாக எரித்துச் சாம்பலாக்குவது போல, யோகிகளின் சித்தத்தில் (மனதில்) நிலைத்து நிற்கும் பகவான், அவர்களுடைய எல்லா பாவங்களையும் முற்றிலுமாக எரித்து ஒழித்து விடுகிறார்''.

இப்படி ஒருவர் திவ்யமங்கள விக்ரஹத்தையுடைய பேரருளாளனை நினைத்த படியே ராத்ரி யோகத்தை அநுஷ்டித்தால் முதலில் மனதைச் சுழற்றி, பின் புலன்களை மயக்கி, இறுதியில் இருப்பையே அசைத்து விடும் அளவுக்குச் செல்வதை உணர்த்துகிறது. இதனால் அவனிடம் மேலும் பக்திபெருகும் என்று கருத்து. மேலும் எம்பெருமானின் திவ்யாத்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும் அவனுடைய திவ்யமங்கள விக்ரஹம் ச்ரேஷ்டம் என்றும், அந்த விக்ரஹ விசேஷத்திலும் அர்ச்சா திருமேனியே ச்லாக்யம் என்றும் அதிலும் பேரருளாளனுடைய திவ்ய திருமேனி பரமைகாந்தி ஸார்வபௌமர்களுக்கு ச்ரேஷ்ட தமம் என்று தாத்பர்யம்.

திருவேங்கடமுடையானுக்கு மிகவும் உகந்ததான இந்த புரட்டாசி மாத இதழில் ஆவணி மாதத்தில் நடைபெற்ற ஸ்வாமி தேசிகனின் திருவோணப் புறப்பாடு (கடை ச்ரவணம்) மற்றும் ஸ்ரீஜயந்தி, உறியடி உத்ஸவ வண்ணப்படங்களுடன் விஷ்ணுபுராணத்தில் கூறப்பட்ட திவ்யதம்பதிகளின் பெருமையைக் கூறும் கட்டுரை, சிறப்புக் கட்டுரைகள், அபயப்ரதான ஸாரம் மற்றும் வழக்கம் போல் வரும் ஆங்கிலக் கட்டுரைகளுடன் தேசிக ஸந்தேசம் உங்களின் கரங்களில். ❊

ஸ்ரீ:

From Aavani To Purattasi: A Season Of Divine Grace

FROM THE DESK OF TRUSTEES

With the divine grace of Sri Alarmelmanga Nayika Sametha Sri Srinivasa Perumal and Lord Sri Lakshmi Hayagrivar, and the boundless blessings of Sri Vedanta Desikan, we are pleased to share the sacred happenings during the earlier month and forthcoming festivals of our Devasthanam with all devotees.

The month of Aavani was one of immense spiritual richness, filled with observances that deepened our bond with the Lord and His devotees. The month witnessed the grand celebration of **Thiruvaadippooram,** the holy Avathara day of Andal, followed the next day by the **Oorkola Utsavam.** Devotees gathered in large numbers to witness the exchange of garlands by Perumal and Andal, and Thirukkalyanam and recall the divine mission of Kodhai Nachiyar, whose devotion and surrender to the Lord remains the very essence of our Sampradayam.

The **Kadai Sravanam** was observed with devotion as the last monthly Sravanam Utsavam for **Swami Desikan** before his Vaarshika Utsavam in Purattasi. The Hayagriva Jayanthi on the same day added to the divine fervour. In connection with the **Yajur Upakarma,** an **Adhyayana Homam** was conducted in the temple premises as is the tradition, invoking the blessings of the Lord for the preservation and propagation of the Vedas.

The **Srijayanthi** celebration, marking the Avathara day of **Lord Krishna,** was observed with great fervour, and the **Uriyadi Utsavam** the following day delighted devotees young and old alike, reminding us of the Lord's playful yet profound leelas.

As we enter the auspicious month of Purattasi, the Devasthanam eagerly awaits the grand celebration of Swami Desikan Saatrumurai which falls on September 22 this year. In fact, the **10-day Vaarshika Utsavam for our Acharya** has already begun and will culminate in **Purattasi Sravanam.** This is the most sacred occasion for all Srivaishnavas belonging to Sri Sampradayam, as we commemorate the Avathara of our Acharya, whose works, numbering well over a hundred, continue to illuminate the path of Prapatthi. Soon after, the **seven-day Pavitrotsavam,** a purification utsavam, will be conducted to cleanse and sanctify the temple and its premises. We are sure, the devotees are eagerly looking forward to this as well.

This year, **Navaratri** will be celebrated separately towards the end of Purattasi, unlike the usual practice of it coinciding with the Swami Desikan Utsavam. The **10-day Peyazhwar Utsavam** will also begin towards the end of Purattasi, offering devotees an opportunity to partake in the divine grace of the Azhwar, whose birth place is **Thirumayilai.** The Azhwar Satrumurai (Aippasi-Sathayam) will be preceded by those of the other two Azhwars — Poigai Azhwar and Bhuthat-Azhwar — on the preceding days.

We humbly seek the continued patronage, support, and cooperation of all donors, devotees, and well-wishers. Your generosity alone enables the Devasthanam to carry forward its spiritual, cultural, and renovation activities smoothly.

May the Anugraham of Lord Sri Alarmelmanga Nayika Sametha Sri Srinivasa Perumal, Sri Peyazhwar and Sri Vedantha Desikan, always guide us on the path of knowledge, devotion, and dharma. ❊

Mobile Phone for Devasthanam

We are pleased to inform you that Sri Vedantha Desikar Devasthanam now has a mobile number for the convenience of devotees and Ubhayadhars, in addition to the two Landline numbers. **The mobile number is +91 77086 53799.** Kindly note the same for future communication.

ஸ்ரீ:



பராபவ வருட புரட்டாசி மாத பஞ்சாங்கம்						
ஆங்கில தேதி	தமிழ் தேதி	திதி	வாரம்	நக்ஷத்ரம்	உத்ஸவம்	உபயம்
ஸெப்டம்பர் / அக்டோபர்	புரட்டாசி					
18.09.2026	1	ஸப்தமி	வெள்ளி	கேட்டை	ஸ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவம் 6ம் நாள். காலை பல்லக்கு. மாலை குதிரை வாஹனம்	காலை: 1. ஸ்ரீ V.P. ப்ரேம் குமார், 2. ஸ்ரீமதி P.R. விஜயலக்ஷ்மி பண்ட், 3. ஸ்ரீ P.S. கஸ்தூரி ரங்கன். மாலை: 1. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன், 2. தாமல் ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மன், 3. ஸ்ரீமதி ப்ரியா முரளி
19.09.2026	2	அஷ்டமி	சனி	மூலம்	ஸ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவம் 7ம் நாள். காலை பல்லக்கு. மாலை மேனா பல்லக்கு	காலை: 1. ஸ்ரீ V.R. ராஜ கோபால், 2. ஸ்ரீ V. கண்ணன், 3. ஸ்ரீ அர்விந்த் ஜெயகர். மாலை: 1. ஸ்ரீ நாராயணன் ராம்ஜி, 2. ஸ்ரீ ஸஞ்ஜீவ் செல்லப்பா, 3. ஸ்ரீ C. ஸந்தோஷ்
20.09.2026	3	நவமி	ஞாயிறு	பூராடம்	ஸ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவம் 8ம் நாள். காலை மேனா பல்லக்கு. மாலை யானை வாஹனம்	காலை: 1. மாடபூசி ஸ்ரீ ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட், 2. ஸ்ரீ S.S. ராகவன், 3. ஸ்ரீ S. க்ருஷ்ணன். மாலை: 1. ஸ்ரீ G. வாஸுதேவன், 2. ஸ்ரீ T.V. ராமானுஜம், 3. தையார் ஸ்ரீ நரஸிம்மன்
21.09.2026	4	தசமி	திங்கள்	உத்திராடம்	ஸ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவம் 9ம் நாள். காலை திருத்தேர். மாலை தங்கக் கேடயம்	காலை: ஸ்ரீ ஸ்ரீநிவாஸ கைங்கர்ய ஸபா. மாலை: 1. ஸ்ரீ N.S. கண்ணன், 2. ஸ்ரீ C. க்ருஷ்ணன்
22.09.2026	5	ஏகாதசி	செவ்வாய்	உத்திராடம் / ச்ரவணம்	ஸ்ரீ தேசிகன் சாற்றுமுறை. காலை மூலவர் திருமஞ்ஜனம், மங்களாசாஸனம், ஸ்ரீ பெருமாள், ஸ்ரீ தேசிகன் வீதிபுறப்பாடு, பெருமாள், தாயார், ஸ்ரீ தேசிகன் திருமஞ்ஜனம். மாலை பத்தி உலாத்தல், ஸ்ரீ தேசிகன் ஒய்யாளி, மங்களகிரியில் ஸ்ரீ தேசிகன் வீதிபுறப்பாடு, திருவாய் மொழி ஸேவாகாலம், சாற்றுமுறை	காலை: தேவஸ்தானம், ஸ்ரீ S. வரததேசிகன் – ஸ்ரீ V. வெங்கடேஷ், வனபோஜனம் ட்ரஸ்ட். மாலை: ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன்
23.09.2026	6	த்வாதசி	புதன்	ச்ரவணம் / அவிட்டம்	காலை கந்தப்பொடி வஸந்தம். ஸ்ரீ தேசிகன் வீதிபுறப்பாடு. மாலை விடாயாற்றி உத்ஸவம் 1-ம் நாள் திருமஞ்ஜனம்	காலை: ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன். மாலை: ஸ்ரீமதி ஸுபத்ரா பாலாஜி குடும்பத்தினர்
24.09.2026	7	த்ரயோதசி	வியாழன்	அவிட்டம் / சதயம்	காலை ஸ்ரீ தேசிகன் விடாயாற்றி உத்ஸவம் 2-ம் நாள் திருமஞ்ஜனம். மாலை: பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம்	காலை ஸ்ரீ S. ஸுந்தரம் குடும்பத்தினர். மாலை: ஸ்ரீ K.L. ராமதுரை

ஸ்ரீ:



25.09.2026	8	சதுர்தசி	வெள்ளி	சதயம்	காலை ஸ்ரீ தேசிகன் விடாயாற்றி உத்ஸவம் 3- நாள் திருமஞ்ஜனம். மாலை அதிவாஸம். பெருமாள் கண்ணாடி அறைக்கு எழுந்தருளல்	காலை: ஸ்ரீ R. கோபாலஸ்வாமி ஐயங்கார் பண்ட். மாலை: ஸ்ரீ அத்திகிரி அருளாளன்
03.10.2026	16	ஸப்தமி / அஷ்டமி	சனி	திருவாதிரை	ஸ்ரீ ராமாநுஜர்	
04.10.2026	17	அஷ்டமி / நவமி	ஞாயிறு	புனர்வஸு	காலை ஸ்ரீராமர் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம்	V.D.R. பண்ட்
05.10.2026	18	தசமி	திங்கள்	புஷ்யம்	திருமால்வடை	
06.10.2026	19	ஏகாதசி	செவ்வாய்	ஆயில்யம்	காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு	ஸ்ரீ R. உமாசங்கர்
07.10.2026	20	த்வாதசி	புதன்	மகம்	திருமழிசையாழ்வார்	
08.10.2026	21	த்ரயோதசி	வியாழன்	பூரம்	ஸ்ரீ ஆண்டாள்	
09.10.2026	22	சதுர்தசி	வெள்ளி	உத்திரம்	காலை: பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் உள் புறப்பாடு	உத்திரம்: S.V.S. ராகவன் பண்ட்
10.10.2026	23	அமாவாசை	சனி	ஹஸ்தம்	காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு	தாமல் ஸ்ரீ லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் குடும்பத்தினர்
11.10.2026	24	ப்ரதமை	ஞாயிறு	சித்திரை	மதுரகவி ஆழ்வார்	
12.10.2026	25	த்விதீயை	திங்கள்	ஸ்வாதி	நவராத்ரி உத்ஸவம் 1-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பத்தி உலாத்தல்	ஸ்ரீ V.சேஷாத்ரி குடும்பத்தினர்
13.10.2026	26	த்ருதீயை	செவ்வாய்	விசாகம்	நவராத்ரி உத்ஸவம் 2-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 1-ம் நாள். காலை வீதிபுறப்பாடு, திருமஞ்ஜனம். இரவு ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீ K.R. ஸ்ரீநிவாஸன்
14.10.2026	27	சதுர்த்தி	புதன்	அனுஷம்	நவராத்ரி உத்ஸவம் 3-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 2-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு, திருமஞ்ஜனம். இரவு ஸேவாகாலம், சாற்றுமுறை	நவராத்ரி உத்ஸவம்: ஸ்ரீ D. ஸுந்தர வரதன் குடும்பத்தினர். பேயாழ்வார் உத்ஸவம் 10 நாட்களும் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன்
15.10.2026	28	பஞ்சமி	வியாழன்	கேட்டை	நவராத்ரி உத்ஸவம் 4-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 3-ம் நாள். காலை வீதிபுறப்பாடு, திருமஞ்ஜனம். இரவு ஸேவாகாலம், சாற்றுமுறை	N.R. ராமக்ருஷ்ணன்

16.10.2026	29	ஷஷ்டி	வெள்ளி	கேட்டை / மூலம்	நவராத்ரி உத்ஸவம் 5-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 4-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு, திரு மஞ்ஜனம். இரவு ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீ M.K. ராமஸ்வாமி குடும்பத்தினர்
17.10.2026	30	ஸப்தமி	சனி	மூலம் / பூராடம்	நவராத்ரி உத்ஸவம் 6-ம் நாள். காலை பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பத்தி உலாத்தல். பேயாழ்வார் உத்ஸவம் 5-ம் நாள். காலை பேயாழ்வார் வீதிபுறப்பாடு, திரு மஞ்ஜனம். இரவு ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீ ராகவன்
குறிப்பு: 26.09.2026 முதல் 02.10.2026 வரை திருப்பவித்ரோத்ஸவம் - பத்ரிகை 16 - 17 பக்கங்களில்						

அருளிச்செயல் அருஞ்சொற்பொருள் அகராதி 1

அக்காரக்கனி: புதிதாய்ப் பழுத்த, சுவை மிகுந்த பழம். ஸஹகாரம் என்ற வடமொழியின் திரிபாய் அக்காரம் என்பது ஒட்டுமாங்கனி என்பர் சிலர். அக்காரம் ஸஹகாரத்தின் திரிபல்ல. அக்காரம் - சர்க்கரை அல்லது வெல்லம். அக்ஷாரம்; க்ஷாரம் - காரம். அதல்லாதது இனிப்பு. பழமில்லாத மரம் புதிதாய்ப் பழுத்தாற்போல சுவைமிக்க பொருள். பழமில்லாத மரமாவது கரும்பு. அதற்கு உடலிலேயே சுவை பழத்தில் இருக்க முடியாததாகையால், அது பழமில்லாத மரமாயிற்று. பழமில்லாத கரும்புச் செடி பழுத்தால் அதன் பழம் மிக மிக இனிப்பாகும். அதுபோல இனிமைமிக்க பொருள் என்பர். கடிகை மூலவர் திருநாமம்.

அக்காரவடிசில்: அக்காரம் சர்க்கரை, அடிசில் : சோறு, சர்க்கரைப் பொங்கல் என்று சொற்பொருள். ஆனால் பொங்கலல்லாத வேறு வகைக்கு இது பெயராகிறது. அரிசியும் பச்சைப் பருப்பும் சமமாக நாலு பங்கு பாலில் சமைத்து சர்க்கரையும் நெய்யும் அதிகமாகக் கலந்து செய்வதுதான் அக்காரவடிசில். பால்சோறு என்பது பாயஸாந்நம். சர்க்கரைப் பொங்கல் என்பது சர்க்கராந்நம் பாயஸாந்நம் என்ற வடசொல்லில் வெல்லம் இல்லை. அக்காரவடிசில் என்ற தமிழ்ச் சொல்லில் பால் இல்லை. பாயஸாந்நம் என்னும் பால் சோறான தமிழ்ச்சொல்லில் கூட வெல்லம் இல்லையாயினும் அது அக்காரவடிசிலுக்கே பெயராகிறது என்பர்.

அகஞ்சுரிப்படுத்தல்: குறைத்தல்.

அகப்பைக் குறி: அகப்பை அளவு. ஒரு பொருளை கடன் வாங்குபவர்கள் 'கைக்குறியாகத் தாருங்கள் ஆப்பைக்குறியாகத் தாருங்கள்' என்று சொல்லுவார்கள். அசலகத்தில் உப்பு முதலியவை கையளவு கரண்டியளவாகக் கடன் வாங்குவது பற்றி அகப்பை என்பது ஆப்பை ஆயிற்று.

அகம்படியர்: அடியார்கள், அபிமானிகள்.

அகமர்த்தம்: ஆத்மா.

அகவலைப்படுத்தல்: வீழ்தல் வலையில் அகப்படுத்தல்; வலையில்

அகழ்ந்துபோடுகை: பறித்துப் போடுகை.

அங்கமணி சீர்வரிசை: 'ஆனை மேல் அங்கமணி கொண்டு வந்தாளோ' என்று மருமகளை மாமியார் ஏசுவது உண்டு.

அங்காந்து: வாயைத் திறந்து

அங்கோல தைலம்: அழிஞ்சில் தைலம். அழிஞ்சில் பழம் அம்மரத்தின் கீழே உதிர்ந்து கிடந்தால், ஆகாயத்தில் மின்னினால், அப்போதே, அரிஞ்சுப் பழம் மரத்தில் பழையபடியே ஒட்டும். அப்போது அந்தப் பழத்தை வாங்கி தைலமாக்கி ஒரு மா விதையிலே தடவி, தரையிலே நட்டால், அப்போதே முளைத்து பெரிய மரமாய் காய்த்துப் பழுக்கும் என்பர்.

அச்சுத்தாலி: அச்சடித்தவற்றைக் கோத்துக் கழுத்தில் அணியும் ஆபரணம்.

அச்சோ: சிறு குழந்தையை முதுகில் அணைத்துக்கொள்ள விரும்புவார் சொல்லும் சொல்; இரக்கத்தையும் வியப்பையும் குறிக்கும்.

அசலகத்தார்: அசல் வீட்டார்.

அசலிடுகை: இறைவனைவிட்டு கடைசி நிலையிலே போவது; அதாவது ஆசார்யனைப் பற்றுகை

அஞ்சுகுடி: பகவத் விஷயத்துக்கு என்ன தீமை வருமோ என்று பயப்படும் குடி - ஆழ்வார்கள்.

(தொடரும்...)

ஸ்ரீ:



பெருமாளும் பிராட்டியும்

ஸ்ரீ உ.வே. பெருமாள்கோவில் கொ. ஸுதர்சநாசார்யர் ஸ்வாமி,
தமிழ்ப் பண்டிதர், வைகுண்டவாஸீ

பெரிய பிராட்டியாராகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மி ப்ருகு மஹர்ஷிக்குத் தமது பார்யையான க்யாதியினிடம் பிறந்தவளென்றும், அம்ருதமதந காலத்தில் பாற்கடலில் பிறந்தவளென்றும் புராணங்கள் கூறும். எனினும் லோகமாதாவான பிராட்டி என்றென்றைக்கும் எம்பெருமானோடு பிரிவற்றவளாய் நித்யையாய் இருக்கின்றவளேயன்றி ஐநநாதிகள் உள்ளவளன்று. எம்பெருமானைப்போல் அவளும் அவதரிப்பதும் மறைவதுமாயிருப்பாள். எம்பெருமான் விபுவாய், எங்கும் நிறைந்து, ஸத்யம், ஜ்ஞானம், அநந்தம் முதலிய ஸகல கல்யாண குணங்களுடன் விளங்குவது போலவே, பிராட்டியும் விளங்குவள். இப்படி ஸகல பூதங்களுக்கும் தாயும் தந்தையுமான இந்த சரண்ய தம்பதிகளின் மஹா விபூதி வைபவம் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:-

பெருமாள்	பிராட்டி
பதத்துக்குப் பொருள் அந்தப் பெருமாள்	அந்தப் பொருளைத் தெரிவிக்கும் பதம் பிராட்டி
அந்நீதியின் உபாயமான நயம் அவன்	இப்படியே நீதி இவள்
அப்புத்தியால் ஆகும் போதம் அவன்	இவள் புத்தி
தர்மம் ஸ்ரீமந்நராயணன்	அந்தத் தர்மத்துக்கு ஸாதகமான ஸத்க்ரியை பத்மாலயை
ஸ்ருஷ்டிக்கிறவன் ஸ்ரீ விஷ்ணு தேவன்	அந்த ஸ்ருஷ்டி சக்தி ஸ்ரீதேவி
இந்தப் பூமியைத் தரிப்பவன் எம்பெருமான்	இவள் பூமி
அந்தப் பகவான் ஸந்தோஷம்	அந்த ஸந்தோஷத்தை உண்டாக்கும் ஸந்துஷ்டி இந்தப் பிராட்டி
காமம் என்பது பகவான்	இச்சை என்பது ஸ்ரீதேவி
யஜ்ஞமானது ஸ்ரீ மாதவன்	தக்ஷிணையானது ஜகந்மாதா
புரோடாசம் ஸ்ரீ ஜநார்த்தனன்	ஆஜ்யாஹுதியானது கமலை
ப்ராக்வம்சமென்பது மதுஸூதநன்	பத்நிசாலை என்பது ஸ்ரீதேவி
யூபஸ்தம்பம் ஸ்ரீஹரி	யாகசயநம் ஸ்ரீலக்ஷ்மி
எம்பெருமான் தர்ப்பம்	பிராட்டி ஸமித்து
ஸாம வேதம் ஸ்ரீ பகவான்	அதில் சேர்ந்த உத்கீதி என்பது ஸ்ரீலக்ஷ்மி
ஜகத்பதியான ஸ்ரீ வாஸுதேவன் அக்நி பகவான்	இந்திரையானவள் ஸ்வாஹாதேவி
ஸ்ரீ விஷ்ணு பகவான் சங்கரன்	ஸ்ரீமஹாலக்ஷ்மி கௌரிதேவி
கேசவனே ஸூர்யன்	அந்த ஸூர்யனுடைய ப்ரபை கமலை
எம்பெருமான் பித்ருதேவதா ஸ்வரூபி	ஸ்ரீதேவி ஸ்வதா ஸ்வரூபி
அதிவிஸ்தாரமான ஆகாசத்தின் பரப்பே ஸ்ரீமஹாவிஷ்ணு	ஜகந்மாதாவான ஸ்ரீமஹாலக்ஷ்மி ஆகாசம்
சரிய: பதியே சந்த்ரன்	சந்த்ரனின் காந்தியாகிய நிலவே ஸ்ரீதேவி
ஸர்வகதனாகிய ஸ்ரீஹரியே வாயு	மேகாதிகளைத் தரிக்கத்தக்க அக்காற்றின் செய்கையே திருமகள்
ஸமுத்ரம் ஸ்ரீ கோவிந்தன்	ஸ்ரீதேவி ஸமுத்ரத்தின் அலை முதலான விக்ருதி
மதுஸூதநனே தேவேந்த்ரன்	இந்திரையே இந்திராணி.
சக்ரதரனான பகவானே யமன்	கமலாலயையே யம பத்நியான துர்மோரணை
ஸ்ரீதரனான தேவனே குபேரன்	ஸ்ரீதேவியே அக்குபோனுடைய செல்வம்
கேசவனே வருணன்	லக்ஷ்மியே வருண பத்நியான கௌரி

கோவிந்தனே தேவஸேநாபதியான ஸ்கந்தன்	லக்ஷ்மீ தேவியே தேவஸேநை
கதாதரனே பிடிப்பு	அதற்குக் காரணமான சக்தியே ஸ்ரீதேவி
நிமிஷ ஸ்வரூபம் நாராயணன்	காஷ்டையின் ஸ்வரூபம் லக்ஷ்மி
முஹூர்த்தம் ஸ்ரீவ ாஸுதேவன்	முஹூர்த்தத்தின் அவயவமான கலை ஸ்ரீ லோகமாதா
திருவிளக்கு ஸர்வேச்வரன்	அதன் காந்தி லோகநாயகி
ஸ்ரீ மஹாவிஷ்ணு வ்ருக்ஷம்	ஸ்ரீதேவி அதன் கொடி
சக்ரதரன் பகல்	ஸ்ரீகாந்தை ராத்ரி
வரப்ரதனான விஷ்ணுவே மணமகன்	தாமரையாள் மணமகள்
பகவான் நத ஸ்வரூபன்	ஸ்ரீதேவி நதி ஸ்வரூபை
புண்டரீகாக்ஷனான பெருமாள் அரசருடைய கொடி	புண்டரீகவல்லி அதன் கொடிச்சீலை
லோகேச்வரனான நாராயணன் லோபம்	லோகேச்வரியான லக்ஷ்மி ஆசை
கோவிந்தன் ராகம்	ஸ்ரீதேவி அதன் காரணமாகிய காதல்

இப்படி, தேவதைகளுக்குள்ளும், மனிதர்களுக்குள்ளும், திர்யக்குகளுக்குள்ளும், மற்றுமுள்ள வஸ்துக்களுக்குள்ளும், புல்லிங்கமான பேருடைய பதார்த்தங்களெல்லாம் ஷாட்குண்ய பரிபூர்ணனான ஸ்ரீஹரியாவன்; அப்படியே ஸ்த்ரீலிங்கமான பேருடைய பதார்த்தங்கள் யாவும் ஸ்ரீமஹாலக்ஷ்மி. இவ்விருவரினும் வேறான வஸ்து ஒன்றுமில்லை. எல்லாம் அவர்களால் வ்யாக்கப்பட்டு அவர்களுடைய விபூதியாகவே விளங்குகின்றன.

- ஸ்ரீ விஷ்ணு புராணம்



ஸ்ரீ:

அர்த்திகல்பகன்

ஸ்ரீ உ.வே. பழவேரி சக்ரவர்த்தி ரா. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி, பெங்களூரு

உலகில் பிறர்க்குத் தன் பொருளை வாரி வழங்கும் வள்ளல்களைக் காமதேனு என்றும் கல்பவ்ருக்ஷம் என்றும் கொண்டாடுவதைக் காண்கின்றோம். எம்பெருமானையும் பிராட்டியையும் கூட ஆழ்வாரா சார்யர்கள் காமதேனு என்றும் கல்பகம் என்றும் கூறுகின்றனர். இக்கட்டுரையில் எம்பெருமானைக் கல்பக மரமாகக் கூறுவதைப் பற்றி மட்டும் காண்போம். கல்பகம் என்ற வடசொல் தமிழில் கற்பகம் என்ற உருவைப் பெறுகின்றது. கற்பகம் ஒருக்காலும் எம்பெருமானின் கொடைக்கு எடுத்துக் காட்டாகாது. ஆகையால் எம்பெருமானைக் கற்பகமாகக் கூறும்போது கற்பக மரத்திலிருந்து வேறுபடுத்திக் காட்ட சில அடைமொழிகளை இடவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

ஆகையால் ஸ்வாமி நம்மாழ்வார் **என்னை ஆக்கிக்கொண்டு எனக்கே தன்னைத் தந்த கற்பகம் என் அமுதம்** என்றார். நமக்கு ஒன்றில் ஆசை ஏற்பட்டால், ஆசைப்பட்ட அப்பொருளைப்பெற தேவலோகத்தில் இருக்கும் கற்பக மரமத்தை நாடினால், அதனால் முடிந்தவளவில் அவ்வாசையை நிறைவேற்றும். அதனிடம் நீ எனக்கு வேண்டும்; என்னுடன் என்வீட்டுக்கு வா! என்றால் வராது. மக்களுக்கும் நாறும் மட்டையுமான அதனால் ஆவதொன்றில்லை; ஆகையால் மக்களும் அதைப்பெற விரும்பார்கள். ஆனால் எம்பெருமான் அவனிடம் ஒன்றை வேண்ட நம் ஆசையைத் தூண்டுபவன்; அவ்வாசையால் நாம் வேண்டினால் அவ்வாசையை முழுதுமாக நிறைவேற்றுபவன். உலகில் சிலருக்குச் சிலர் சிலவற்றை வழங்கி நான் தந்தேன் என மார்தட்டிக் கொள்வர். இவன் அத்தகையவன்று. மிகவும் இனியனான தன்னையே வழங்கவல்லன். இவன் எல்லோர்க்கும் எல்லாவற்றையும் எல்லாக்காலத்தும் தரவல்லவன். இவனையே வள்ளல் என்பது தகும். **கொள்ளக்குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும் கோதில் என் வள்ளல்** என்றார் ஆழ்வார்.

கற்பகத்திடம் கைபீனம் கேட்டாப்போலே, குபேரனிடம் கைபீனம் கேட்டாப்போலே என்ற சொல்லாட்சியையும் நாம் நூல்களிலே காண்கின்றோம். மிக உயர்ந்த பலனைத் தரவல்லவனிடம் தாழ்ந்த பலனைக் கேட்பவனின் செயலைக் கூற மேற்படி சொல்லாட்சி பயன்படுத்தப்படுகின்றது. ஆகையால் எம்பெருமானிடம் அழியக்கூடிய பொருட்களைக் கேட்பது கற்பகத்திடம் கைபீனம் கேட்பதை ஒக்கும் என்பர். கற்பகமரம் அழியும் பொருளையே தரவல்லது. ஆனால் எம்பெருமானாகிய கற்பகம் தன்னையே தரவல்லது. ஆகையால் **தன்னைத் தந்த கற்பகம்** என்றார் ஆழ்வார். சில பலன்களை முழுமையாகத் தரவியலாதால் பலருக்கு ஒரு பொருளை வழங்கும் கற்பகம். ஒரு தகப்பன் ஒரு மாம்பழம் வாங்கி வந்து மூன்று குழந்தைகளை பங்குகிட்டு சாப்பிடச் சொல்வதை ஒக்கும் இது. எம்பெருமானோ ஒருவனே முழுமையாக ஒரு பலனை அநுபவிக்கும்படித் தரவல்லவன். ஒரு முழு மாம்பழத்தை ஒரு குழந்தைக்கே சாப்பிடக் கொடுப்பதை ஒக்கும் இது. இதை **எனக்கே** என்ற சொல்லால் காட்டினார் ஆழ்வார்.

மேற்படி நம்மாழ்வாரின் ஸ்ரீஸூக்தியைத் திருவுள்ளத்தில் கொண்டு ஸ்வாமி எம்பெருமானார் **அர்த்திகல்பக!** என்ற விளிச்சொல்லை ஸ்ரீ சரணாகதி கத்யத்தில் பயன்படுத்தியுள்ளார். அர்த்திகல்பகன் என்பது ஒரு கூட்டுச் சொல்லாகும். தனிச் சொற்களால் கூறுவதைவிட கூட்டுச்சொல்லை உருவாக்கிக் கூறும்போது அது பல பொருட்களை வழங்கும்படி அமைந்துவிடும். ஆகையால்தான் பண்டிதர்கள்



பெரும்பாலும் பல பொருட்கள் கிட்டும்படி சொல்லை அமைக்க விரும்பினால் கூட்டுச்சொல்லாலும், தான் கூறவிரும்பும் பொருளைவிட்டு வேறு பொருளை மற்றவர்கள் கொள்ளக்கூடாது என எண்ணினால் தனிச் சொற்களாலும் வாக்கியத்தை அமைப்பதையும் உலகில் காண்கின்றோம்.

ஸ்வாமி எம்பெருமானார் ஆழ்வார் காட்டிய வழியில் பற்பலபொருட்களைக் குறிக்கும்படி **அர்த்திகல்பக!** என்ற ஒரு கூட்டுச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அதாவது அர்த்திகளுக்குக் கற்பகமே! எனத் தனிச் சொற்களைப் பயன்படுத்தவில்லை. மற்றொன்று இங்கு உற்று நோக்க உளது. கல்பக வ்ருக்ஷமே என மரம் என்ற சொல்லையும் கூட்டி பயன்படுத்தவில்லை. கல்பக: (கல்பகன்) என்ற சொல் கல்பக மரத்தையும் உண்டாக்குபவன் என்ற இரண்டு பொருட்களைத் தரவல்லதாகும். உலக வழக்கிலும் என் வார்த்தைக்கு வேறு பொருளை நீ கல்பிக்காதே (உண்டாக்காதே)! என்கிற பயன்பாட்டைக் காண்க! ஆகையால் எம்பெருமானார் மரம் என்ற சொல்லைக் கூட்டாமல் அர்த்திகல்பக! என்ற கூட்டுச்சொல்லால் விளிச் சொல்லை உருவாக்கினார்.

இச்சொல்லுக்கு முன்னோர் உரையில் கூறிய பொருட்களுடன் மேலும் பல பொருட்களை வேற்றுமைத்தொகையின் படியும், பண்புத் தொகையின் படியும், அன்மொழித்தொகையின் படியும் கூறி உரையிட்டுள்ளார் நம் தூப்புல் திருவேக்கடமுடையான். அவற்றைக் காண்போம்.

1. தன்னை யாசித்தவர்களுக்குக் கல்ப வ்ருக்ஷம் போன்றவனே!; யார் வந்து யாசித்தாலும் கல்பக மரம் போல் வழங்குபவன். (கற்பகத்தால் தரவியலாத வற்றையும் எம்பெருமான் தரவல்லவன் என்ற வேற்றுமையும் மனதில் கொள்ளத்தக்கது)

2. அர்த்தியாயும் கற்பமாயும் இருப்பவனே!: வேண்டித்தரும் கற்பமாகும் எம்பெருமான். தேவலோகத்தில் இருக்கும் கற்பகம் தன்னிடம் வந்து வேண்டியவர்களுக்குத் தான் வேண்டியதைத் தரும். அது வேண்டித் தராது. ஆனால் எம்பெருமான் வேண்டி வேண்டித் தருபவன். தன் வீட்டுக்கு வருபவர்களுக்கு அன்னம் இடுபவர்களைப் போல் கற்பகம்; தன் வீட்டுக்கு வாருங்கள்! வாருங்கள்! என வேண்டி அழைத்து அன்னம் இடுபவர்களை ஒத்தவன் எம்பெருமான்.

3. எவனுக்கு யாசகர்கள் கல்பக வ்ருக்ஷம் போன்றவர்களோ அத்தகையவனே!: அதாவது தன்னிடம் யாசிப்பவர்களை எம்பெருமான் கல்பக வ்ருக்ஷமாக எண்ணுபவன் என்பது இதனால் கூறப்பட்டது. தன்னிடத்திலே புருஷார்த்தங்களை வேண்டிப் பெறுபவர்களை உதாரர்கள் என்றான் அல்லவா கண்ணன் கீதையில்! உலகில் தன்னிடம் யாசிப்பவர்களைக் கீழ்மக்களாக எண்ணுவர்கள் மக்கள். எம்பெருமான் அத்தகையவனல்ல என்பது இதனால் கூறப்பட்டது.

4. யாசகர்களை உண்டாக்குபவனே!: அதாவது சாஸ்த்ரங்களை உலகத்தில் வெளியிட்டு அவற்றால் மக்களுக்கு அறம், பொருள், இன்பம் மற்றும் வீடு என்னும் புருஷார்த்தங்களை அறிவித்து, அவர்களிடம் தன்னிடம் அவற்றை வேண்டும் தன்மையை உண்டாக்குபவனே! என்பது இதன் பொருளாகும்.

மேலும் ஸ்வாமி தேசிகன், எம்பெருமானார் ஏற்கனவே இக்கத்யத்தில் எம்பெருமானின் கல்யாணகுணங்களைப் பட்டியலிடும்போடு ஔதார்யம் என்ற பண்பைக் கூறியிருந்தும் தற்போது எம்பெருமானை அர்த்திகல்பக! என மீண்டும் விளித்துள்ளது இக்குணத்தின் மேன்மையைத் அறிவிப்பதில் நோக்கமுடையாதாகையால் கூறியதுகூறல் என்ற குற்றம் வாராது எனவும் அருளிச்செய்துள்ளார்.

இவ்விடத்தில் உரையிட்டது மட்டுமின்றி பற்பல க்ரந்தங்களில் ஸ்வாமி தேசிகன் எம்பெருமானுக்கும் மற்ற வள்ளல்களுக்கு மிடையே உள்ள வேற்றுமையைக் காட்டியுள்ளார். ரகுமஹாராஜனிடம் ஒருமுறை தானம் வாங்கியவனுக்கு வாழ்வில் மீண்டும் மற்றொருவனிடம் கையேந்த வேண்டிய அவசியம் இருக்காது என்றான் மஹாகவி காளிதாஸன். ஸ்வாமி அதற்கு ஒருபடி மேலே சென்று யதுமஹாராஜனிடம் தானம் வாக்கியவன் யதுவிடம் தானம் வாங்கவருபவர்களுக்குத் தான் தானம் வழங்கி அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்துவிடுகிறான் என்றார். அதனால் தன் தேவைக்கு மட்டுமின்றி மற்றவர்களின் தேவையை நிறைவேற்றுமளவுக்குத் தானம் கொடுப்பவன் யது என்ற பொருள் மட்டுமின்றி அவனுடைய வள்ளல் தன்மையும் யாசகர்களிடம் சேருவதைக் காட்டினார் ஸ்வாமி தேசிகன். இதை எம்பெருமான் விஷயத்தில் நாம் கொள்ளலாம்.

மற்றும் கற்பகம் நாமிருக்குமிடம் தேடிவந்து நம் தேவையை நிறைவேற்றாது. ஆனால் நாமிருக்குமிடம் வந்து உதவுபவன் என்பதை தண்டகாதபோவனத்தில் நடக்கும் – நடந்த பாரிஜாதமரமே! என்றார் மஹாவீரவைபவத்தில் தூப்புல் பிள்ளை. அர்ச்சையிலும் அத்தகைய பாரிஜாத மரமாய் இருப்பவன் மாலோலன் என்பது உலகறிந்த உண்மை. ❊

ஸ்ரீ:

ஓணவிழவில் ஒலியதிர

Dr. ஸ்ரீமதி ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு


எம்பெருமான் செய்யும் அற்புதங்களில் ஆழங்காற்படுவது மட்டுமின்றி அழகு தமிழில் ஆழ்பொருளையும் இணைத்துப் பாடுபவர்கள் ஆழ்வார்கள்! நமக்குகிழிச்சீரையுடன்தனம்தருபவர்கள்! கண் கவரும் பட்டுத்துணியில் கட்டிவைத்த தங்கக்கட்டியாக அந்த ஆழ்பொருளையும் ஸ்வாபதேசமாகத் தம் பாசுரங்களில் உள்ளடக்கிப் பாடுபவர்கள்! மண்ணையும் மலையையும் கடலையும் நதியையும் பாடுவார்கள்! அலை ஓசையும், அசையும் கொடிகளும், சிலம்பும் புட்களும், வருத்தும் வாடையும், வீசும் தென்றலும் அவர்களுக்குப் பல சேதிகளைச் சொல்லும்! ஏன், குதிரையின் கனைப்பொலியில் கூட வேதவொலியைக் கேட்பவர்கள்! காலை எழுந்திருந்து இனிதாய் ஒலிக்கும் கரிய குருவிக் கணங்கள் மாலின் வரவைச் சொல்வதாக மகிழ்ந்துபாடுவர்!

இவர்களில் ஒருவரான திருமழிசை ஆழ்வார் அருளிச்செய்த நான்முகன் திருவந்தாதியில் ஓர் பாசுரம்!

காணலுறுகின்றேன் கல்லருவி முத்துதிர
ஓணவிழவில் ஒலி அதிர - பேணி
திருவேங்கடவா என்னுள்ளம் புகுந்தாய்
திருவேங்கடம் அதனைச் சென்று. [41]

திருவேங்கடவனைப் பாட விழைந்த ஆழ்வார் அப்பெருமாளின் அவதார தினமாகிய திருவோண நன்னாளை தீர்த்தவாரி தினமாகக் கொண்டு நடைபெறும் புரட்டாசி ப்ரஹ்மோத்ஸவத்தைத் தம் மனக்கண்களால் கண்டு மகிழ்கிறார்! பார் போற்றும் அப்புரட்டாசிப் பெருவிழாவினைத் தாமும் நேரில் சென்று கண்ணாரக் கண்டு மகிழ அருளுமாறு அப்பெருமாளையே வேண்டுகிறார்! திருமலையில் விரும்பி வந்து உறைந்தது போல் தம் உள்ளத்திலும் அப்பெருமான் உவந்து வந்து புகுந்ததை வியந்தும் மகிழ்ந்தும் பாடுகிறார்!

திருமலையில் அருவிகள் **'கல்'** என்னும் ஓசையுடன் ஆர்ப்பரித்துக் கொண்டு விழுகின்றன! அதிலே மலையிலிருந்து அடித்துக்கொண்டு வரும் வெண் முத்துக்களும், வண்ணமயமான ரத்னங்களும், எங்கும் உதிர்ந்து சிதறி ஒளியையும், ஒலியையும் எழுப்புகின்றன! மேலும் திருவோணத்திருவிழாவினை முன்னிட்டு நடைபெறும் உபய வேத, ஆகம பாராயண கோஷங்களும் அடியார்களின் கோவிந்தா கோஷமும் மங்கள வாத்யங்களின் முழக்கங்களும்



எங்கும் அதிர ஒலிக்கின்றன! இதனை **ஓணவிழவில் ஒலியதிர** எனப்பாடுகிறார் ஆழ்வார்!

வேதவொலியும் விழாவொலியும் பிள்ளைக் குழா விளையாட்டொலியும் என்று பாடிய நம்மாழ்வாரின் கருத்துக்கிணங்க இவ்வொலிகளெல்லாம் திருவிழா காணும் திவ்யதேசங்களின் தனிச் சிறப்பன்றோ!

மழிசையாரின் இப்பாசுரத்தில் திருவோண நக்ஷத்ரம் தந்த ஸ்வாமி தேசிகனின் அற்புதமான அவதாரம் உள்ளுறைப் பொருளாக உணர்த்தப்படுவதை நாம் உணரலாம்!

வைபவ ப்ரகாசிகை என்னும் நூல் ஸ்வாமி தேசிகனின் அவதாரத்தைப் பற்றிக் கூறுகையில் *''ராமானுஜ தரிசனம் ஸங்குசிதமாகாமல் பணைக்க (பல கிளைகளை உடையதாக) வேணுமென்று திருவுள்ளம் பற்றி விரோதி நிரசன பூர்வகமாக தர்சன அபிவ்ருத்தி ஆக வேணுமென்றும், அதுவும் ஒரு* **நா உடையவராலேயே** *ஆகவேணுமென்றும் அறுதியிட்டு வேதாத்மாவாய் சொல்லப்பட்ட தம்முடைய திருமணியாழ்வானை தம் அவதார தினத்திலேயே அவதரிக்கச் செய்தார்'' என்கிறது!*

வேங்கடேச அவதாரோயம் என்று திருவேங்கட முடையான் தாமே தம் அவதார தினத்திலேயே தேசிகனாக அவதரித்தான் என்று அறுதியிடுவோரும் உண்டு! **அர்ச்சையிலிருந்து விபவத்தின் அவதாரம்! அற்புதம்! என்று கொண்டாடினர்!**

நீளா ஸூக்தம் **ச்ருண்வந்தி ச்ரோணாம், அம்ருதஸ்ய கோபாம்** என்கிறது! ''ச்ரவணம் சொல்வதை காது கொடுத்துக் கேளுங்கள்! அவை உங்களை ரக்ஷிக்கும் அமுதமாகும்'' என்கிறது! ச்ரவணம் பேசியதா? எங்கு எப்பொழுது என்ன பேசியது? இதற்கான விடை இதோ! ஆழ்வாரின் பாசுரத்தில்!

எம்பெருமானின் திருவடிகளை அடைய அத்திருவடிகளையே உபாயமாகக் கொள்வதுபோல் ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டே ஸ்வாமியின் அவதாரம் இங்கு மறை பொருளாகக் காட்டப்படுவதை நாம் உணரலாம்!

ஸ்ரீநிவாஸனின் **தயையைப் பாடினவர்** ஸ்வாமி தேசிகன்! தயை என்னும் குணத்திற்கு ஓர் உருவம் உண்டு என்று திருமலையைக் காட்டுகிறார்! அங்கே தெளிந்த பெரும் தீர்த்தங்களாகத் தேங்கி நிற்கும் மடுக்கள் எல்லாம் நம் தாபங்களைத் தீர்க்கும் திரவ ரூபத்திலான தயை என்றும் பாடியவர்! அதிலிருந்து பெருகிவரும் அருவிகளும் தயையே உருவெடுத்த நம் ஆசார்ய பரம்பரை என்றும் பாடுகிறார்!

ஸ்வாமி நம்மாழ்வார் எம்பெருமானைத் **தீர்த்தன்** என்று கவி பாடினார்! அத்தீர்த்தனை நன்கறிந்த நம் ஆசார்யார்களும் தீத்தர்கள் தாமே! தம்மை நாடிவரும் அடியார்களின் மனவிருள் மாற்றி அழுக்கினை அகற்றி புனிதப்படுத்தும் ஆசார்யர்களைத் தண்மை மிகு அருவிகளாகக் கொள்வது சாலப் பொருந்துமன்றோ!



இவ்விதம் நம் ஆசார்ய பரம்பரையில் **குளிரருவி வேங்கடத்து என் கோவிந்தனின் குணம் பாடியவர்** ஸ்வாமி தேசிகனே! எப்படிப் பாடினார்?

தன்னைத் தான் பாடி என்றார் போல் தம்மைக் கவிபாடத் திருவோணத் திருவிழவின் **தீர்த்தவாரி தினமாகிய தம் அவதார நக்ஷத்ரத்திலேயே வேங்கடநாதன் என்னும் குருவாய் அருள் மிகுத்ததொரு வடிவாய் தாமே வந்து அவதரித்தான் திருவேங்கடமுடையான்!** அவதரித்த இவ்வாசார்யரும் வெள்ளைப் பரிமுகர் பரிவுடன் தம் உள்ளத்தே எழுதியதை அரும் பெரும் நூல்களாக விரித்து உரைத்து அருளிச்செய்தார்! **ஸம்ஸார தாபம், மெய்யறிவின் தாகம்** இரண்டையும் தீர்க்கவல்ல தண்மை மிகு அருவிகளாகும் இவருடைய ஸ்ரீஸூக்திகள்! பெருகிப் பாயும் இவ்வருவிகள் கல் என்னும் ஒலி எழுப்புகிறதாம்! **வெறும் கல்லைப்போல் வாழ்ந்திருக்காமல் இந்நூல் களைக் கற்று மகிழும்படி அவ்வருவிகள் கல் என்று நமக்குச் சொல்கின்றன!**

தத்வ முக்தாகலாபம், தாத்பர்ய ரத்னாவளி, மும்மணிக்கோவை, நவமணிமாலை எனப்பல முத்துக்களும் ரத்னங்களும் தெறித்துவிழும்போது உண்டாகும் ஒளி நமக்கு ஞானமருளும் அதேவேளையில் அவற்றின் அதிரும் ஒலிகள் பர சமயத் திறல் அழியச் சென்று செருச்செய்ய வல்லவையாகும்! தயா சதகத்தின் நிறைவுச்லோகமும் இக்கருத்தை வெளிப்படுத்தும்! **காமம் ஸந்துமித:** எனத்தொடங்கி ஸ்வாமி இதில் ஸாதிப்பதாவது:

''இத் துதிநூல் தேத்தாங்கொட்டையைப் போல் கலங்கினவர்களைத் தெளிவிக்க வல்லது! எனினும், இதில் சில தோஷங்களை சிலர் கூறலாம்! ஆனால் திருமலையின் அருவிகளின் பேரொலியும் ஆனந்த நிலைய விமானத்திலிருந்து வரும் திவ்ய தம்பதிகளின் ஆனந்த ஆரவாரத்தின் ஒலியும் இணைந்து சிலர் கூறும் அத்தோஷங்களை (பரமதவாதிகளின் வாதங்களை) அடக்கி வெளிவராதபடி செய்து விடும்'' என்கிறார்!

தன்னையே தான் பாடி என்றதுபோல் திருமலை எம்பெருமானே மீண்டும் ஒரு ஓணநாளில் வேங்கடநாதனாய் அவதரித்துப் பலவாறு பாடியும் பேசியும் மகிழ்ந்தார்! ஒலிக்கும் அவ்வோண விழவின் ஒலியாகிய அவருடைய ஸ்ரீஸூக்திகளைக் கற்று மகிழ்வது நமக்குப் பெறாப்பேறு மட்டுமின்றி கடமையும் ஆகுமன்றோ! ❊

Sponsorships and donations towards publication expenses are welcome



திருவாடிப்பூர உத்ஸவம்







திருவாடிப்பூர உத்ஸவம்








கடை ச்ரவணம்













ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

திருப்பவித்ரோத்ஸவ பத்ரிகை

பசலி 1436 ~ பராபவ வருஷம் ~ 2026

26.09.2026 முதல் 02.10.2026 வரை

ஸ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அர்ச்சாரூபியாய், அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பனாய் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தம் ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனும், முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய, ஸ்ரீபேயாழ்வார் அவதாரஸ்தலமுமாயும், தூப்புல் நிகமாந்த மஹாதேசிகனைக் கொண்டு அனுபவித்து வரும் ஸ்தலமுமாகிய திருமயிலையில் எழுந்தருளியிருப்பவனுமான ஸ்ரீதிருவேங்கடமுடையான் நாளது பராபவ வருஷம் புரட்டாசி மாதம் 9ம் தேதி (26.09.2026) சனிக்கிழமை முதல் பவித்ரோத்ஸம் ஆரம்பித்து நடத்திக் கொள்வதாக ஸங்கல்பித்துக்கொண்டிருக்கிறான்.

மேற்படி உத்ஸவத்தில் வேதபாராயணம், அத்யாபகம், க்ரந்த பாராயணம் ஆகிய கைங்கர்யங்களில் ஸ்வாமிகள் அன்வயித்து, மாமயிலை திவ்யதம்பதிகள், ஸ்ரீபேயாழ்வார் மற்றும் ஸ்வாமி தேசிகனின் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்ரர்களாக வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

அங்குரார்ப்பணம் – 24.09.2026 – வியாழக்கிழமை மாலை

அதிவாஸம் – 25.09.2026 – வெள்ளிக்கிழமை மாலை

மஹாபூர்ணாஹுதி – 02.10.2026 – வெள்ளிக்கிழமை இரவு

தினசரி ஹோமம் – காலை 8:30 மணி மற்றும் இரவு 8:15 மணி

ப்ரதி தினம் மாலை 6.15 மணிக்கு பெருமாள், தேசிகன் திருவீதி புறப்பாடு

L.N. ஸ்ரீநிவாஸன், P. ஸ்ரீஹரி, N. கஸ்தூரிரங்கன்

தர்மகர்த்தாக்கள்

நாள்	காலை உத்ஸவ உபயம்	காலை ததீயாராதனை உபயம்	மாலை உத்ஸவ உபயம்	மாலை ததீயாராதனை உபயம்
24.09.2026 (வியாழன்)	அங்குரார்ப்பணம் (மாலை) ஸ்ரீ ஸேனைநாதன் புறப்பாடு	——	ஸ்ரீ K.L.ராமதுரை	——
25.09.2026 (வெள்ளி)	அதிவாஸம் (மாலை)	——	ஸ்ரீ அத்திகிரி அருளாளன்	——
26.09.2026 (சனி)	1. ஸ்ரீ. R. முகுந்தன், 2. ஸ்ரீ. ஸதீஷ் க்ருஷ்ணன்	1. ஒலக்கூர் ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸன் 2. ஸ்ரீ S. ரவிச்சந்திரன்	1. ஸ்ரீ N.S. பார்த்தஸாரதி 2. ஸ்ரீ N. ரங்காசாரியார்	1. ஸ்ரீ K. ராஜகோபாலன் 2. ஸ்ரீ N.சேஷாத்ரி
27.09.2026 (ஞாயிறு)	1. ஸ்ரீமதி ஜானகியம்மாள் பண்ட் 2. ஸ்ரீ S.பத்மநாபன்	1. ஸ்ரீ K.R. ராமஸ்வாமி 2. ஸ்ரீ R. பார்த்தஸாரதி	1. ஸ்ரீ P.V. ராகவன் பண்ட் 2. ஸ்ரீ மதுராந்தகம் ஸ்ரீநிவாஸன்	1. ஸ்ரீ N.S. வரதாச்சாரி குடும்பத்தினர் 2. ஸ்ரீ. N.கேசவன் குடும்பத்தினர்
28.09.2026 (திங்கள்)	1. ஸ்ரீமதி பத்மா ராமானுஜம், 2. ஸ்ரீ S.T. ராகவன்	1. ஸ்ரீ S.V.S. ராகவன் 2. ஸ்ரீ. R. ராமக்ருஷ்ணன்	1. ஸ்ரீ A.N.S. ஸுந்தரம் 2. ஸ்ரீ ஸ்ரீதரன் கேசவன்	1. ஸ்ரீ A.N.S. ஸுந்தரம் 2. ஸ்ரீ L.V. நரஸிம்மன் குடும்பத்தினர்
29.09.2026 (செவ்வாய்)	1. ஸ்ரீ T.V. நரஸிம்மன் 2. ஸ்ரீ K.V. ஸுந்தரவரதன்	ஸ்ரீ D. ஸுந்தரராஜன்	1. ஸ்ரீ Dr. E. ஸ்ரீநிவாஸன் 2. ஸ்ரீ ராமஸ்வாமி நாராயணன்	1. ஸ்ரீ T.M. ரவி நரஸிம்மன் 2. ஸ்ரீ M.P. ராஜா
30.09.2026 (புதன்)	1. ஸ்ரீ S. அருண் 2. வெங்கஜா சாரிடபிள் ட்ரஸ்ட்	1. ஸ்ரீ M.D. ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட் 2. ஸ்ரீமதி ப்ரேமா பார்த்தஸாரதி	1. ஸ்ரீ N.K. ரங்கஸ்வாமி ஐயங்கார் குடும்பத்தினர் 2. ஸ்ரீமதி R. ஸ்ரீவித்யா ப்ரசாந்த்	1. ஸ்ரீ R. ஸம்பத், 2. ஒலக்கூர் ஸ்ரீ R. ராஜகோபாலன்
01.10.2026 (வியாழன்)	1. ஸ்ரீ S. ஸத்யநாராயணன் & ஸ்ரீ N.கேசவன் குடும்பத்தினர் 2. ஸ்ரீ P. பத்ரி நாராயணன்	1. ஸ்ரீ V.J. பார்த்தஸாரதி 2. ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா 3. ஸ்ரீமதி T.V. சாந்தா	1. ஸ்ரீமதி கமலா & சுமைதாங்கி க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் குடும்பத்தினர் 2. ஸ்ரீமதி R. மஹாலக்ஷ்மி	1. ஸ்ரீ T.M. ராஜகோபாலன் 2. ஸ்ரீ. R. முகுந்தன்
02.10.2026 (வெள்ளி)	1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust 2. கீழச்சேரி ஸ்ரீ S. ராகவன்	1. ஸ்ரீ V.S. கண்ணன் 2. ஸ்ரீ R. ராகவன்	1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust 2. ஸ்ரீ. வஸந்த் ஷான்பாக் பூர்ணாஹுதி திருமஞ்ஜனம் ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி	ஸ்ரீ K. பரத்வாஜ்

பட்டு பவித்ரங்கள் உபயம் : Dr. திலீப் க்ருஷ்ணா; ப்ரதி தினம் காலை, மாலை க்ஷீர கைங்கர்யம் உபயம் : ஸ்ரீமதி ஹேமலதா ரமாமணி குடும்பத்தினர்

CONTRIBUTIONS IN KIND / CASH ARE WELCOME

மாதமழைமுகில்



யஜுர் உபாகர்ம அத்யயன ஹோமம்









யஜுர் உபாகர்ம அத்யயன ஹோமம்









ஸ்ரீஜயந்தி ஆஸ்தானம்



உறியடி உத்ஸவம்







ஸ்ரீ:

ஸ்ரீ அபயப்ரதாந ஸாரம் ⑧
அதிகாரம் - 3 - சரணாகதி தாத்பர்ய ப்ரபஞ்ச:
ஸுந்தர காண்டத்தில் சரணாகதி

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

இதுவரை பால-அயோத்யா-ஆரண்ய-கிஷ்கிந்தா காண்டங்களில் அநுஷ்டிக்கப்பட்ட சில சரணாகதி ப்ரகரணங்களை ஸ்வாமி தேசிகன் நமக்கு ஸாதித்தருளியதை அநுபவித்தோம். இனி, ஸுந்தர காண்டத்தில் அநுஷ்டிக்கப்பட்ட சரணாகதியின் வைபவத்தை ஆசார்யவள்ளல் எவ்வாறு கொண்டாடுகிறார் என்பதைப் பார்ப்போம்.

சத்ருவாக இருந்தாலும், அவர்களையும் ரக்ஷிப்பதையே தம் அவதாரத்தின் கர்த்தவ்யமாகக் கொண்டவர் பெருமாள். பெருமாளின் இந்தத் திருக்குணத்திற்கு எள்ளளவும் மாறுபடாதவளாக இருப்பவள் பிராட்டி. லோகரக்ஷண விஷயத்தில் பெருமாளும் பிராட்டியும் ஒரே கருத்தையே கொண்டிருக்கிறார்கள். இதனை ஸுந்தரகாண்டத்தில் பிராட்டி ராவணனுக்குச் செய்த உபதேசத்தின் மூலம் நாம் தெளிவாக அறியலாம்.

மித்ரமௌபயிகம் கர்தும் ராம: ஸ்தாநம் பரீப்ஸதா |
வதம் சாநிச்சதா கோரம் த்வயாஸௌ புருஷர்ஷப: ||

விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: சரணாகதவத்ஸல: |
தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி ||

(ஸுந். கா. 21.19–20)

''ஹே ராவண! இலங்கையையும் உன் உயிரையும் காத்துக்கொள்ள வேண்டும் என்றும், கோரமான அழிவைத்தவிர்க்கவேண்டும்என்றும்நீவிரும்பினால், புருஷச்ரேஷ்டரான ஸ்ரீராமனிடம் நட்பை ஏற்படுத்திக்கொள். தர்மத்தை நன்கு அறிந்தவரும், சரணாகதர்களிடம் பேரன்பு கொண்டவருமான அவரிடம் உன்னை ஒப்படைத்துவிடு. இதனால் உனக்கு மங்களம் உண்டாகும்'' என்று பிராட்டி உபதேசித்தாள்.

எப்படிப்பட்ட ராவணனுக்கு இந்த உபதேசம்? தன்னையே பலாத்காரமாக அபஹரித்துக்கொண்டு வந்தவனும் தன்னிடம் அத்துமீறி நடந்து கொண்டவனாகவும், பெருமாளுக்குப் பரமசத்ருவாகவும் இருப்பவனிடத்தில்கூட, அவனுடைய ஹிதத்தையே கருத்தில் கொண்டு, அவனுக்கு ஸ்ரீராமனிடம் சரணாகதி செய்யுமாறு பிராட்டி உபதேசிக்கிறாள்.

இப்படி, சரணாகதர்களின் ரக்ஷண விஷயத்தில் பெருமாளும் பிராட்டியும் ஸமாநமான அபிப்ராயத்தை உடையவர்கள் என்பதை, பிராட்டியிடத்தில்



அநுஷ்டிக்கப்பட்ட சரணாகதியின் மூலம் ஸ்வாமி தேசிகன் நமக்கு உணர்த்தியருளுகிறார்.

த்ரிஜடை சரணாகதி

ராவணன் ஸீதையைத் தன் மனைவியாக ஏற்றுக்கொள்ளுமாறு நிர்ப்பந்தித்தான். ஆனால், எத்தகைய அச்சுறுத்தல்களும், ஆசை வார்த்தைகளும் கூறப்பட்டபோதிலும், ஸீதை அவனது விருப்பத்திற்கு இணங்க மறுத்துவிட்டாள். இதனால் கோபமுற்ற ராவணன் அங்கிருந்த ராக்ஷஸிகளிடம் ஸீதையைத் தன் வசப்படுத்துமாறு கட்டளையிட்டு அங்கிருந்து அகன்றான். அதன்பின், அந்த ராக்ஷஸிகள் ஸீதையைச் சூழ்ந்துகொண்டு, மிகவும் கடுமையான வார்த்தைகளைக் கூறி அவளை அச்சுறுத்தத் தொடங்கினர். ஒருபுறம், ராவணனின் கொடுமை; மறுபுறம், அவனைச் சார்ந்த ராக்ஷஸிகளின் கொடுஞ் சொற்கள். இவ்வாறு எல்லாப் பக்கங்களிலிருந்தும் துன்பம் சூழ்ந்த நிலையில் இருந்த ஸீதை தன் உயிரை விட்டுவிடப் போவதாகக் கூறினாள். ஸீதையால் இவ்வாறு சொல்லப்பட்டதும் கோரமான ராக்ஷஸிகள் சிலர் அவளுக்கு கெடுதி நேர்ந்தே தீரும் என்றும் பிராட்டியைபுசித்தேதீருவோம்என்றும்மிரட்டினார்கள். அப்போது அறிவில் முதியவளான த்ரிஜடை தான் கண்ட ஸ்வப்னத்தை அந்த ராக்ஷஸிகளிடம் விவரித்தாள்: ''இழிகுணம் படைத்தவர்களே! ஜனகருடைய புதல்வியும், தசரதருடைய அன்புக்குரிய நாட்டுப்பெண்ணுமான சீதையை,

புரட்டாசியில் முக்கிய உத்ஸவங்கள்

ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்
ஸெப்டம்பர் 22 (செவ்வாய்) வரை
திருத்தேர் - ஸெப்டம்பர் 21 (திங்கள்)

திருப்பவித்ர உத்ஸவம் (7 நாட்கள்)
ஸெப்டம்பர் 26 (சனி) முதல்
அக்டோபர் 2 (வெள்ளி) வரை

நவராத்ரி உத்ஸவம் (9 நாட்கள்)
அக்டோபர் 12 (திங்கள்) முதல்
20 (செவ்வாய்) வரை
மஹாநவமி - அக்டோபர் 20 (செவ்வாய்)
விஜயதசமி - அக்டோபர் 21 (புதன்)

பேயாழ்வார் உத்ஸவம் (10 நாட்கள்)
அக்டோபர் 13 (செவ்வாய்) முதல்
22 (வியாழன்) வரை

உங்களால் புசிக்க முடியாது. தீயசிந்தனையுடைய நீங்கள் உங்களையே சாப்பிட்டுக் கொள்வீர்கள். ராக்ஷஸர்கள் எல்லாம் அற்றுப் போய்விட்டதாகவும், இவருடைய கணவருக்கு வெற்றி ஏற்பட்டதாகவும், ஓர் அற்புதமான மெய்சிலிர்க்க வைக்கும் கனவை நான் பார்த்தேன்!'' என்றாள்.

த்ரிஜடை தான் கண்ட கனவைத் தொடர்ந்து விவரிக்கிறாள். அதில், வெண்மையான மலைமீது ஸீதை மங்களகரமாகக் காட்சியளிப்பதாகவும், ராமனும், லக்ஷ்மணனும் அவளுடன் வெற்றியுடன் வருவதாகவும் கண்டதாகக் கூறினாள். விஷ்ணுவுக்கு நிகரான பராக்ரமம் கொண்ட ராமனை தேவாஸுரர்களாலும் ராக்ஷஸர்களாலும் எவராலும் வெல்ல முடியாது என்றும், அதே கனவில், ராவணனும் அவனுடைய புதல்வர்களும் கும்பகர்ணனும் அழிவையும் அவமானத்தையும் குறிக்கும் பல்வேறு துர்நிமித்தங்களுடன் காணப்படுவதாகவும், ஆனால் விபீஷணன் மட்டும் வெண்குடையுடன் மங்களகரமான நிலையில் காட்சியளிப்பதாகவும், இவ்வாறு ராமனுக்கு வெற்றியும், ஸீதைக்கு விமோசனமும், ராவணனுக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் அழிவும் ஏற்படப் போவதைத் த்ரிஜடை தன் ஸ்வப்னத்தில் கண்டதாகக் கூறுகிறாள்.


மேலும்,

ததலம் க்ரூர வாக்யைர் வ: ஸாந்த்வமோவாபிதீயதாம் |
அபியாசாம வைதேஹீம் ஏதத்தி மம ரோசதே ||

பர்த்ஸிதாமபி யாசத்வம் ராக்ஷஸ்ய: கிம் விவக்ஷயா |
ராகவாத்தி பயம் கோரம் ராக்ஷஸாநாமுபஸ்திதம் ||

ப்ரணிபாதப்ரஸந்நா ஹி மைதிலீ ஜநகாத்மஜா |
அலமேஷா பரித்ராதும் ராக்ஷஸ்யோ மஹதோ பவேத் ||

''நான் சொல்வதைக் கேளுங்கள். இனி ஸீதையினிடத்தில் க்ரூரமான வார்த்தைகளைக் கூறாதீர்கள். ம்ருதுவாகவே பேசி நம்மை ரக்ஷிக்கும்படி ஸீதையினிடத்தில் ப்ரார்த்திப்போம். இப்போது நாம் செய்யக்கூடியது இவ்வளவே. ஏற்கனவே நாம் ஸீதையை துன்புறுத்தியிருந்தாலும் அவள் மறந்துவிட்டால் என்ன செய்வது என்று பயமில்லாமல் ப்ரார்த்தியுங்கள்.



பெருமாளிடத்திலிருந்து ராக்ஷஸர்களுக்கு நேர்ந்திருக்கும் பயத்திலிருந்து ஸீதையால் மட்டுமே நம்மை ரக்ஷிக்க முடியும். ரகுவீரனிடத்திலிருந்து ராக்ஷஸிகளை ரக்ஷிக்கவல்லவள் இவளே. ஜனக புத்ரியான மைதிலியோ ஒரு நமஸ்காரத்தாலேயே த்ருப்தியடையும் ஸ்வபாவம் உடையவள்.'' என்றாள். இதைக் கேட்டும் மிகவும் மகிழ்ந்த மைதிலி,

ததஸ் ஸா ஹ்ரீமதி பாலா பர்த்துர்விஜயஹர்ஷிதா /
அவோசத்யதி தத் தத்யம் பவேயம் சரணம் ஹி வ: //

''நீங்கள் கூறியபடி உண்மையில் நடந்துவிட்டால், நீங்கள் எல்லோரும் என்னை அடைக்கலமாக அடையவேண்டிய ஸந்தர்ப்பம் ஏற்பட்டால் நான் உங்களுக்கு நிச்சயமாக அடைக்கலம் தருவேன்'' என்று த்ரிஜடை மட்டுமின்றி, ஆர்த்ராபராதிகளான அந்த ராக்ஷஸிகளையும் (த்ரிஜடையின் குலஸம்பந்தம் என்ற ஒரே காரணத்தினால்) ரக்ஷணம் பண்ணுவதாக பிராட்டி அங்கீகரித்தாள்.

ராவண வதத்திற்குப் பின்னர் ஸ்ரீராமரின் விஜயத்தைப் பற்றி பிராட்டியினிடத்தில் தெரிவித்த ஸமயத்தில், அதுவரை அவளிடத்தில் அபாரதங்களை செய்து வந்த இந்த ராக்ஷஸிகளைப் சிக்ஷிக்க எண்ணிய திருவடி, அவர்கள் அனைவரையும் அடித்து துன்புறுத்த வேண்டும்என்றுதான்எண்ணுவதாகவும்அதற்குஅவள் அனுமதி தரவேண்டுமென்றும் பிராட்டியினிடத்தில் ப்ரார்திக்கிறார். பிராட்டியோவென்னில்,

பாபாநாம் வா சுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம /
கார்யம் கருணமார்யேண ந கச்சிந் நாபராத்யதி //

''வாநரச்ரேஷ்ட! பாபம் செய்தவர்களோ அல்லது புண்யம் செய்தவர்களோ; அவர்கள் தண்டிக்கத் தக்கவர்களாயினும், சரணமடைந்தால் பெருந்தன்மை உடையவர்கள் அவர்களிடம் இரங்கி ரக்ஷிப்பார்கள். உலகில் அபராதம் செய்யாதவர்களே கிடையாதல்லவா!'' என்று திருவடிக்கு அறிவுறுத்தி அவர் ப்ரார்தனையை நிராகரித்து, முன்னதாக ராக்ஷஸிகளுக்கு அளித்த வாக்குறுதியை இப்போது செயலால் நடத்திக்காட்டினாள். இதுவே த்ரிஜடை சரணாகதிக்கு இருக்கக்கூடிய ஓர் மிகப்பெரிய ஏற்றம்.

மாதர்-மைதிலி ராக்ஷஸீஸ்-த்வயி
ததைவார்த்ராபதாஸ்-த்வயா
ரக்ஷந்த்யா பவநாத்மஜாத் லகுதரா ராமஸ்ய கோஷ்டீ க்ருதா /

காகம் தம் ச விபீஷணம் சரணமித்யுக்தி-க்ஷமௌ ரக்ஷத:
ஸா ந: ஸாந்தர-மஹாகஸ: ஸுகயது
க்ஷாந்திஸ்-தவாகஸ்மிகீ //

(ஸ்ரீ குணரத்ன கோசம் - 50)



காகாஸுரனும் விபீஷணனும் ''சரணம்'' என்று ப்ரார்த்தித்த பின்னரே பெருமாள் அவர்களை ரக்ஷித்தார். ஆனால், பிராட்டியோ தன்னிடம் ஒரு ப்ரார்த்தனையைக்கூடச் செய்யாத ராக்ஷஸிகளையும், த்ரிஜடையின் ஸம்பந்தம் ஒன்றையே காரணமாகக் கொண்டு ரக்ஷித்தாள். இதனால், பெருமாளின் சரணாகத ரக்ஷண தர்மத்திற்கும் மேலாகப் பிராட்டியின் ரக்ஷணத்தில் வெளிப்படும் வாத்ஸல்யத்தின் வைபவத்தை பட்டர் கொண்டாடுவது இங்கே அநுஸந்தித்தக்கத்தக்கது.

ப்ரபத்திக்கு சொல்லப்பட்ட ஐந்து அங்கங்களான ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்ய வர்ஜனம், மஹா விச்வாஸம், கோப்த்ருத்வ வரணம், கார்ப்பண்யம் ஆகியவை த்ரிஜடை சரணாகதி ப்ரகரணத்தில் மிகவும் ஸ்பஷ்டமாக அமைந்திருப்பதாக ஆசார்யனே ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் - ஸாங்கப்ரபதாநாதிகாரத்தில் அறிவிக்கிறார்.

உத்தரகாண்ட வ்ருத்தாந்தங்கள்

இனி உத்தரகாண்டத்தில் இடம்பெறும் சில சரணாகதி வ்ருத்தாந்தங்களை ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்கிறார்.

இராவணனுடைய பாட்டன் காலத்தில், எம்பெருமான் ''விஷ்ணு'' என்ற அவதார ரூபத்தில் எழுந்தருளியிருந்தபோது, தேவர்கள் ராக்ஷஸர்களால் தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களிலிருந்து தங்களை ரக்ஷிக்குமாறு பெருமாளைச் சரணடைந்தார்கள். தம்மைச் சரணடைந்த தேவர்களை ஹிம்ஸித்த



Vivaaha Sandesam

(Matrimonial column)

Bride wanted

K. Sundar and Usha Sundar (Vadakalai Iyengar - Bharadwaja gothram) are seeking alliance for their son Shyam Sundar (1987 born / Swathi star / 5' 1"). The groom, B.E., MBA / Insurance broking in Chennai, is one of the twins and his twin brother is married. Any degree-holding, working girl preferred. Contact No: 98407 93507.

ராக்ஷஸர்களைத் த்வம்சம் செய்ய ஸங்கல்பித்த எம்பெருமான், அவர்களுடன் யுத்தம் செய்து அவர்களை வதம் செய்யத் தொடங்கினார். எம்பெருமானுடைய வீர்யத்தைக் கண்டு அஞ்சி, ராக்ஷஸர்கள் புறமுதுகிட்டு இலங்கைக்குள் ஓடி ஒளிந்தார்கள். ஆனால் பெருமாள் அவர்களை விடாமல் பின்தொடர்ந்து, ''சார்ங்கமுதைத்த சரமழைகளால்'' அவர்களைச் சூறையாடினார்.

அப்போது ராக்ஷஸர்களில் ஒருவனான மால்யவான்,

நாராயண ந ஜாநீஷே க்ஷாத்ரம் தர்மம் ஸநாதநம் /
அயுத்தமநஸோ பக்நாந் யோஸ்மாந் ஹந்ஸி யதேதர: //

(உத். கா. 8:3)தி

''நாராயணா! வெகுகாலமாக க்ஷத்ரியர்கள் அநுஷ்டித்து வரும் ஸநாதனமான க்ஷத்ரிய தர்மத்தை நீ அறியவில்லையா? யுத்தம் செய்ய விருப்பமின்றிப் பயந்து புறமுதுகிட்டு ஓடுகின்ற எங்களை, விவேகமற்றவனைப் போல தொடர்ந்து கொல்கிறாயே!'' என்று முறையிட்டான்.

பகவானோ வென்னில், ''க்ஷத்ரியனன்றோ க்ஷத்ரிய தர்மத்தை அநுஷ்டிக்க வேண்டும். நான் க்ஷத்ரியன் அல்லன், ஸர்வேச்வரன். ப்ராஹ்மண-க்ஷத்ரிய-வைச்யாதி தர்மங்களுக்கு அப்பாற்பட்டவன். அதர்மங்களை அநுஷ்டிக்க வேண்டிய அவச்யம் எனக்கில்லை. என்னை ''நாராயணா'' என்று நீ விளித்தாய். எல்லோரையும் நியமிப்பவனாக இருக்கும் எனக்கென்று ஒரு தர்மம் இருக்கிறது. அது நாராயண-தர்மமான சரணாகத ரக்ஷண தர்மத்தை அநுஷ்டிக்கிறோம். உங்களால் ஹிம்ஸிக்கப்பட்ட தேவர்களுக்கு உங்களைக் கொள்வதாக அபயம் கொடுத்திருக்கிறேன். அதை நான் இப்போது நிறைவேற்றுகிறேன். நாம் தேவர்களுக்குப் பண்ணின அபயப்ரதாநத்தாலே பசுக்களுக்காகப் புலிகளைத் தொடர்ந்து கொல்லும் கணக்கிலே உங்களைக் கொள்ளுகிறோம்.'' என்றருளினார்.

இதற்குப் பின்னர், கிஷ்கிந்தையில் வாலி வதத்தின் போதும் ரக்ஷகன் இதே தர்மத்தை வெளிப்படுத்தினார். நேருக்கு நேர் நின்று யுத்தம் செய்யாமல் மறைந்திருந்து தன்னை வதம் செய்த ராமனைக் குறித்து வாலி கடுமையான வார்தைகளைக் கொண்டு கேள்வி எழுப்பினான். அதற்கு பெருமாள், ''ஹே வாநர! தர்மம் என்பது மிகவும் ஸூக்ஷ்மமானது; ஸாதுக்களாலும் எளிதில் அறிந்துகொள்ள முடியாதது. என்னைச் சரணடைந்த ஸுக்ரீவனிடத்தில் நீ செய்த அபராதத்திற்காகவே உனக்கு இந்த சிக்ஷை அளிக்கப்பட்டது'' என்று கம்பீரமாக அருளிச்செய்தார். இங்கும், பொதுவாகக் கூறப்படும் க்ஷத்ரிய தர்மத்தைக்காட்டிலும், சரணாகதனை ரக்ஷிக்கும் தர்மமே பெருமாளுடைய அநுஷ்டானத்தில் முதன்மை பெறுகிறது என்பது திண்ணம்.

மேலும், ராமன் வனவாஸம் சென்றபோது அவருடைய பிரிவைத் தாங்க முடியாமல் அயோத்தியில் இருந்த மரம், செடி, கொடி முதலான தாவரங்கள்கூட வாடி வதங்கின. அவதார ஸமாப்தி காலத்தில், தம்முடைய பிரிவினால் இவ்வாறு துன்புற்ற அந்தத் தாவரங்களுக்கும் எம்பெருமான் மோக்ஷத்தை அருளினான். இப்படி தம்மைச் சார்ந்தவர்களின் துயரத்தைக் கண்டு பொறுக்காதவன், தன்னைச் சார்ந்த அனைத்திற்கும் ரக்ஷகனாக இருப்பவன் என்ற எம்பெருமானுடைய ஸர்வரக்ஷகத்வம் இங்கும் வெளிப்படுகிறது.

இவ்வாறு, க்ஷத்ரிய தர்மம் முதலான பல தர்மங்கள் இருந்தாலும், **தன்னைச் சரணடைந்தவர்களை ரக்ஷிப்பதே ஸர்வேச்வரன் அநுஷ்டிக்கும் ப்ரதானமான தர்மம்** என்பதை இந்த வ்ருத்தாந்தங்கள் மூலமாக ஸ்வாமி தேசிகன் நிர்தாரணம் பண்ணுகிறார். மேலும் ஸ்ரீமத் ராமாயண க்ரந்தம் ப்ரபத்தியை ஸ்பஷ்டமாக வெளிப்படுத்தும் வேதமென்றும் அதில் அப யப்ரதாந ப்ரகரணம் ஸர்வ ரஹஸ்ய ஸாரங்களை யும் வெளிப்படுத்தும் உபநிஷத் பாகம் என்றும் ஸ்தாபித்து இவ்வதிகாரத்தைத் தலைக்கட்டுகிறார். ❊

ஸ்ரீ:

தேசிகனின் நாயிகா அவஸ்தை

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

செழுநீர்த்தடத்துக் கயல் மிளிர்ந்தாலொப்ப சேயரிக்கண்
அழுநீர் துளும்ப அலமருகின்றன - வாழியரோ
முழுநீர் முகில்வண்ணன் கண்ணன் விண்ணாட்டவர் மூதுவராம்
தொழுநீர் இணையடிக்கே அன்புசூட்டிய சூழ்குழற்கே

(திருவிருத்தம் - 2)

பரிபூர்ணமாக ஜலத்தினை முகந்து பெருத்திருக்கும் கருத்த மேகத்தினையொத்த நிறம் கொண்டவனும், பரமபதத்தில் வர்த்திக்கும் நித்யஸூரிகளும் ஆச்ரயிக்கத் தகுந்த பாதாரவிந்தங்களை உடையவனுமான எம்பெருமானின் மீது ப்ரேமையுற்ற பெண்ணின் (நம்மாழ்வார்) நிலை தன்னை ஆச்சர்யம் கொள்ள வைக்கிறது என்கிறாள் தோழி. தானே தனது நிலைமையினைக் கூறினால் தன் தலைவனிடத்தே எடுபடாது போகலாம் என்றஞ்சி தோழி இவளது கதியினை அவனிடத்தே சொல்லுமாப்போலே ஆழ்வார் ஸேவித்த பாசுரமிது.

பக்தியோக நிஷ்டனுக்கு உள்ள மூன்று தசைகளென ஸ்ரீபாஷ்யத்தில் எம்பெருமானார் ஸாதித்துள்ளதில் ஒன்று இந்தப் பாசுரம் காண்பிக்கும் நம்மாழ்வார் அனுபவித்த **பரபக்தி** நிலை. அதே மூன்று தசைகள் ப்ரபந்நனுக்கும் உண்டென்பது ஸ்ரீபாஷ்யகாரர் பங்குனி உத்திரத் திருநாளில் பெரிய பிராட்டியுடனான பெரிய பெருமாளிடம் சரணாகதி செய்தக்கால் நிஷ்கர்ஷம் பண்ணப்பட்டது - **பரபக்தி பரஜ்ஞாந பரமபக்த்யேக ஸ்வபாவம் குருஷ்வ** - சரணாகதி கத்யத்தின் பதினைந்தாவது சூர்ணை.

ஆச்ரிதர்கள் எம்பெருமானை அடைவதற்கு ஹேதுவாகும் இந்த மூன்று தசைகளாவன.

பரபக்தி: எம்பெருமான் தனது ஸ்வரூப ரூப குண விபூதிகளைக் காண்பித்து அவற்றில் மூழ்கச் செய்யும் அனுபவம் - **விசதமானது** (கொஞ்சம் தெளிவு).

பரஜ்ஞானம்: பரபக்தி அருளும் அனுபவத்தில் ஆழங்கால்பட்டு ஜ்ஞானம் மெருகேறி இதர விஷயக் கலப்புகளின்றிக்கே பரஜ்ஞானம் உண்டாவதனால் தேஹத்திலும் மனஸ்ஸிலும் புத்தியிலும் உண்டாகும் அனுபவம் - **விசததரம ானது** (அதிகமான தெளிவு).

பரமபக்தி: தான் சேஷ பூதன். எம்பெருமான் ஒருவனே ஏக போக்யன் என்ற பரஜ்ஞானம் உண்டானதனால் நித்ய கைங்கர்யத்தினையும் கூட அபேக்ஷிக்காத (அநந்ய ப்ரயோஜந) நிலை - விசததமமானது (பரிபூர்ணமான தெளிவு)

இந்த **பரபக்தி, பரஜ்ஞான, பரமபக்தி** ஆகிய மூன்று தசைகளைத் தான் அனுபவித்த பாங்கினை ஸாக்ஷாத் எம்பெருமானாரின் அவதாரமான நம் ஸ்வாமி தேசிகன் மும்மணிக்கோவையில் ஸாதித்தருள்கிறார்.







மும்மணியில் முதல் மணி – பரபக்தி

மொழிவார் மொழிவன மும்மறையாகும் அயிந்தையில் வந்து
இழிவார் இழிக வென்று இன்னமுதக் கடலாகி நின்ற
விழிவார் அருள்மெய்யர் மெல்லடி வேண்டிய மெல்லியள் மேல்
பொழிவார் அனங்கர் தம் பூங்கரும்புந்திய பூமழையே [3]

திருவஹீந்த்ரபுரம் எனும் இத்திவ்ய தேசத்தில் பேசுவோர் உச்சரிக்கும் வார்த்தைகள் அனைத்துமே வேத வாக்யங்கள் தாம். இங்கு எழுந்தருளியிருக்கும் நாதனை வந்து ஸேவித்து அநுபவிக்க அபேக்ஷிப்போருக்கு இவன் அம்ருத ஸாகரமாகிறான். திருநேத்ரங்களில் கருணை பெருகி வழியும் இவ்வெம்பெருமானது திருவடியின்பால் மோஹம் கொண்டவளும் மிகவும் ம்ருதுவான சரீரத்தினை உடையவளுமான இந்த ஸ்த்ரீயின் (ஸ்வாமி தேசிகன்) மீது தனது கரும்பு வில்லிலிருந்து புஷ்பத்தினை வர்ஷிக்கிறார் அனங்கர்.

தெய்வநாயகனுடன் கூடல் அமையாதுக்கித்திருக்கும் வேளையில் மன்மதனானவன் தனது கரும்பு வில்லிலிருந்து மோஹத்தினை அதிகரிக்கும் புஷ்பங்களை வர்ஷித்து வாட்டத்தினை மேலும் கூட்டுகின்றானே என்று நாயிகா பாவத்தில் ஆசார்யன் ஸாதிப்பது இந்தப் பாசுரத்தின் மேலோட்டமான அர்த்தமாகிறது.

இங்கு மன்மதன் அம்பு என்பது பஞ்சேந்த்ரியங்கள் உண்டாக்கும் ஆசாபாசங்களினால் அநுபவமாகும் பரிபவங்களைக் குறித்தது. எம்பெருமானான பரமாத்மாவை ஜீவாத்மா அடைய முடியாத படிக்கே கர்மானுகுணமான ப்ரக்ருதி ஸம்பந்தமானது வாட்டுகிறது என்பது உள்ளர்த்தம்.

இழிவார் இழிக வென்று இன்னமுதக் கடலாகி நின்ற விழிவார் அருள் – எம்பெருமானின் ஸ்வரூப ரூப குணாதிகளை அறிந்ததனால் நம் ஆசார்யனுக்கு அவன் மீது உண்டான ப்ரீதியின் பரீவாஹமே எம்பெருமானார் ஸாதித்த முதல் தசை – **பரபக்தி.**

மும்மணியில் இரண்டாம் மணி – பரஜ்ஞானம்

ஆர்க்கும் கருணை பொழிவான் அயிந்தையில் வந்தமர்ந்த
கார்க் கொண்டலைக் கண்ட காதல் புனமயில் கண்பனியா
வேர்க்கும் முகிழ்க்கும் விதிர்விதிர்க்கும் வெள்கி வெவ்வுயிர்க்கும்
பார்க்கின்றவர்க்கிது நாம் என்கொல் என்று பயிலுவமே [6]

மேகத்தினையொத்த கரிய திருமேனி நிறத்தினை உடையவனும் அனைவர்க்கும் க்ருபை புரிபவனுமான தேவநாதன் திருவஹீந்த்ரபுரத்தில் எழுந்தருளியிருக்கிறான். அவனை ஸேவித்த மயிலினையொத்த அழகிய பெண்ணின் நிலைமையை அவளது தாய் சொல்வதாய் அமைந்த பாசுரமிது.

கானகத்தே தன்னிச்சையாகத் திரிந்து கொண்டிருக்கும் மயிலானது மழை மேகத்தினைக் கண்டக்கால் மகிழ்ந்து உடல் சிலிர்த்து அங்குமிங்கும் ஓடி மெதுமெதுவாகத் தனது அழகிய தோகையினை விரித்து ஆநந்த நடனமாடும். அது போலவே, தனது நாயகனின் ஸ்வரூபத்தினை அறிந்த ஸ்த்ரீயானவளின் நேத்ரங்களில் நீர் கோர்த்து வழிய, தேகத்தில் வியர்வை வழிந்தோட, மெய் சிலிர்த்து, நடுநடுங்கி, தனது நிலைமையினை நினைந்து நாணம் கொண்டதனால் ஸ்வாஸத்தில் வெப்பம் கூடி பெருமூச்சு உண்டாகியது.

பார்க்கின்றவர்க்கு இது நாம் என்கொல் என்று பயிலுவமே – இந்நிலையில் இவளைப் பார்ப்போர் ஏனிப்படி இருக்கிறாள் என்று கேட்டால் நான் என்னவென்று சொல்வது என்பது அந்தத் தாயின் அங்கலாய்ப்பு.

தேவநாதனை ஸேவித்த கணத்தில் பெண்ணானவள் (ஸ்வாமி தேசிகன்) அவன் மீது எல்லையில்லாக் காதல் கொண்டதனால்,

கண்பனியா – கண்களில் நீர்த்துளியானது அரும்பி நிற்கும் (**பனி** – ஆநந்தபாஷ்பம் குளிர்ந்ததன்றோ)

வேர்க்கும் – பரவச மிகுதியால் தேஹத்தில் வியர்வை ஊற்றெடுக்கும்

முகிழ்க்கும் – தன் நாயகனது ஸ்வரூபத்தினையும் (**பரஜ்ஞானம்**) தான் யாரென்பதையும் அறிந்ததனால் மயிர்க்கூச்செறியும்

விதிர்விதிர்க்கும் – பரமாத்மாவான அவனது ஏற்றத்தினையும் தனது ஆகிஞ்சந்யத்தினையும் உணர்ந்ததனால் உடலானது நடுநடுங்க

வெள்கி – உயர்வற உயர்நலமுடையவனான நாயகன் தன்னையும் ஒரு பொருட்டாகக் கருதி அவனுள் வைத்ததை நினைந்து நாணமுறுகிறாள்

இந்தப் பாசுரத்தில் பொதிந்துள்ள மேலும் சில ஸ்வாரஸ்யார்த்தங்களை அநுபவித்து மகிழ்வோம்

கார்க் கொண்டல் – மழை மேகம். கருத்த மேகம் தேவநாதன்

புன மயில் – மயிலானது கானகத்தே திரியும். நாயகியானவள் காதலெனும் கானகத்தே வர்த்திக்கிறாள்

கண்ட – கார்மேகத்தினைக் கண்டதனால் மயிலுக்குக் குதூஹலம். நாயகனைக் கண்டதனால் நாயகிக்கு ஸந்தோஷம்

அயிந்தையில் வந்தமர்ந்த – மயிலினை மயக்கும் மேகங்கள் தங்குமிடம் மலை. நாயகியினை (ஆசார்யனை) மயக்கிய காளமேகம் இருக்குமிடம் ஔஷாத்ரி மலையினையுடைய திருவஹீந்த்ரபுரம்

ஆர்க்கும் கருணை பொழிவான் – மேகம் பொழியும் வர்ஷம் அனைவருக்குமானது. காளமேகமாம் தேவநாதன் பொழியும் கருணை எனும் வர்ஷமும் இன்னார் இவரென்று தாரதம்யம் பாராதது. ஸகலருக்குமானது.

புருஷகார பூதையாகிய பிராட்டியைச் சரணடைந்த தனால் அவளது நாயகனின் ஸ்வரூப ரூப குண விபூதிகளைப் பற்றி அறிந்ததோடல்லாமல், வேதாகமங்கள் காண்பித்துக் கொடுக்கும் அவனை உள்ளபடியே உணர்ந்து தெளிந்ததனால் உண்டான இந்த நிலை, எம்பெருமானார் ஸாதித்த இரண்டாம் தசை - **பரஜ்ஞானம்.**

மும்மணியில் மூன்றாம் மணி - பரமபக்தி

வெற்புடன் ஒன்றி அயிந்தையில் வெவ்வினை தீர் மருந்தொன்று
அற்புதமாக அமர்ந்தமை கேட்டு அருள் வேண்டி நிற்கப்
பற்பிலமர்ந்த செய்யாள் படி காட்டிய பண்புடை எம்
விற்புருவக் கொடிக்கு ஓர் விலங்கா
மயல் பெற்றனமே [9]

ஔஷாத்ரி என்ற மலையினில் அமைந்த திருவஹீந்த்ரபுரத்தில் கொடிய நோயினையும் தீர்க்கவல்ல மருந்தொன்று இருப்பதை செவியுற்று அதனைத் தேடி சென்றக்கால், பிராட்டியின் திருவடி பணிந்தவளும் வில்லினையொத்த அழகிய புருவங்களையுடையவளுமான என் மகளுக்குத் தீராத மயக்கம் உண்டானது என்பது இந்தப் பாசுரத்தின் நேரடியான அர்த்தம்.

வெவ்வினை தீர் மருந்து ஒன்று அற்புதமாக வமர்ந்தமை கேட்டருள வேண்டி நிற்க - தலைவனைப் பிரிந்திருப்பதென்ற (விச்லேஷம்) தனது நோயினைத் தீர்க்க வல்லவன் இங்கிருக்கிறான் என்பதை செவியுற்ற என் மகளானவள், வைத்யனாகும் அவனே தன் நிலைக்கான ஔஷதமும் ஆவான் என்று தனது நோய்க்குத் தீர்வு காண ஓடி வந்தாள்.

பண்புடை எம் வில் புருவக் கொடிக்கு ஓர் விலங்கா மயல் பெற்றனமே - வைத்யனை அடைந்தவுடன் அவளுடைய நோயானது தீருமென்று பார்த்தால் அது தீராத நோயாயிற்று. என் மகளின் ஒரு நோய் தீர்ந்து மற்றொரு நோய் தொற்றிக் கொண்டது

பற்பில் அமர்ந்த செய்யாள் - பற்பு - தாமரை. இல் - இருப்பிடம். எம்பெருமான் மீது மையல் கொண்ட பிராட்டியைக் கூறி அவளைப் போலவே தன் மகளும் (ஸ்வாமி தேசிகன்) அவனிடத்தே மையல் கொண்டுள்ளதை தாய் பாவத்தில் உணர்த்துவது.

விளங்கா மயல் - விளக்கவொண்ணாத மயக்கம் / விலக்கவொண்ணாத மயக்கம். முனிவர்களும் யோகிகளும் தவமாய்த் தவமிருந்து பெறும் சாச்வதமான ஸந்தோஷத்தினைத் தரும் மயக்கம்

இந்தப்பாசுரத்தில்பொதிந்துள்ளஸ்வாரஸ்யங்களாவன:

1. மலைகளில் கிடைக்கும் ஔஷதம் வீர்யமானதாக இருக்கும். ஔஷாத்ரி மலையில் எழுந்தருளி யிருக்கும் தேவநாதனெனும் ஔஷதமானது அனைத்தையும் (தேவதாந்தரங்கள்) விட வீர்யம் மிகுந்தது.



2. லோகாயதமான ஔஷதம் தேஹத்தில் உண்டாகும் பிணிகளை மட்டுமே போக்கும். தேவநாதனெனும் ஔஷதமோ தேஹம் தொடர்பான பிணிகளை மட்டுமல்லாது புநராவ்ருத்தி எனப்படும் நோயினையும் போக்கியருளும் பரம ஔதமாகும்.
3. இன்னின்ன நோய்களுக்கு இன்னின்ன ஔஷதம் என்பது ஸாமான்ய வழக்கம். இந்தப் பரமௌஷதமோ அனைத்து விதமான நோய்களையும் தீர்க்கும் நிரதிசய போக்யமானது.
4. பிணிகள் தீர்க்கும் ஔஷதங்கள் கசக்கும். ஆனால் எல்லாப் பிணிகளையும் போக்கும் இந்த ஔஷதமோ அமுதினையொத்த இனிய சுவையினை உடையது.
5. லோக வழக்கத்தில் இன்ன நோய்க்கு இன்ன ஔஷதம் தீர்வு என்று வைத்தியனானவன் சொல்வான். இங்கோ பேஷஜம் (ஔஷதம் / மருந்து), பிஷக் (வைத்தியன்) இரண்டும் அவனே (உபாயம் / உபேயம்).
6. லோகத்தில், இன்னின்ன மருத்துவர்கள் இன்னின்ன நோய்களுக்கு மட்டுமே சிகிச்சை அளிப்பது என்ற கணக்கு உண்டு. இவனோ, அனைத்து விதமான சிகிச்சைகளும் அளிக்க வல்ல மருத்துவன்.
7. ஸாமான்ய வைத்யர்கள் அளிக்கும் சிகிச்சையானது சிலருக்கு நற்பலனைத் தரும். சிலருக்கு பலிதமின்றிக்கே கை விடும். ஆனால், இந்த மருத்துவன் குணப்படுத்த முடியாத நோய்கள் என்று ஒன்றுமில்லை. அவன் குணப்படுத்தும் நோய்கள் மீண்டும் வருவதில்லை என்பதோடு குணப்படுத்த முடியாது என்று அவன் ஒருபோதும் யாரையும் கை விடுவதுமில்லை.

ஆச்ரிதர் புநராவ்ருத்தியற்ற நிலைமையினை அடைவதற்கென **பரபக்தி பரஜ்ஞான பரமபக்தி** ஆகிய மூன்று தசைகளையும் எளிமையாக உணர்த்திய தூப்புல் திருவேங்கடவனின் பாதாரவிந்தங்களில் சரணடைந்துதிவ்யதம்பதிகளை அடைந்துய்வோம்.

ஸ்ரீ:

Important Tenets Of Our Sampradaya 42

Sarva-Thanthra Swathanthra — A Versatile Genius And More

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

It is celebration time again at our Devasthanam and elsewhere where there are Swami Desika's devotees. We are in the middle of the 10-day annual festival that culminates in the grand Saatrumurai on his Thirunakshathram day (Purattaasi-Sravanam) which falls on September 22 this year. The focus and fervour are no less intensive this year.

The devotee's day is made with the majestic processions of the Acharya. The daily Thirumanjanam, chanting of the Vedas and recitation of Divya Prabandham, and the daily Saatrumurais make it a great treat for all. Add to this the Thadheeyaaraadhanam, the sumptuousness is replete.

This provides a perfect backdrop to reminisce on our illustrious Acharya. This Note takes a peek at the awards he received in his life time, especially, 'Sarva-Thanthra Swathanthra' which was conferred on him by none less than Periya Piraatti. The others are 'Vedanthacharya' from Lord Ranganatha Himself and 'Kavi-Thaarkika Simham' from his peers.

Kumara Varadacharya — disciple-son of Sri Desika — records this in the opening verse of Desika Mangalam thus:

ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ராய ஸிம்ஹாய கவி வாதிநாம்!
வேதாந்தாசார்ய வர்யாய வேங்கடேசாய மங்களம்!!

Normally, we see that accolades and awards make the recipient proud. But in Swami Desika's case, one must say that it is the awards which would have felt blessed. They simply sat snugly on his shoulders.

'Vedanthacharya' means 'Master of philosophy' and 'Kavi-Thaarkika Simham' translates into 'Lion amongst poets and logicians'. The former was handed to him by the Lord, who was overwhelmed by his great works for the cause of Sri Sampradaya and the latter was an acknowledgement by co-scholars of his matchless proficiency in poesy and debates.

But the title 'Sarva-Thanthra Swathanthra' is as much interesting as it is unique. A number of incidents in Swami Desika's life testify to the fact that the accolade was destined to adorn him. He was such a great master of all arts that Ranga Naachiyar could not resist acclaiming him with an all-encompassing accolade like that.



Some well-known incidents in the Acharya's life that fully justify Periya Piraatti's sweeping gesture, are strung together here.

Once, when Swami Desika was in Thiruvaheendra Puram, a mason challenged him to build a well with the bricks supplied by him which were uneven and coarse. The Acharya was equal to the task as he completed the well with the same bricks with finesse. This wondrous well is still there for all to see.

At Kanchi, a snake charmer dared him to tame his snakes which he let out of his baskets. Swami simply drew a few lines and all snakes but one stopped in their strides. The lone snake advanced towards him dangerously but when he chanted the Garuda Manthra, an eagle suddenly flew in from nowhere and picked up all the snakes. Having lost his livelihood, the charmer apologised and prostrated before the Acharya. He composed Garuda Dandakam and the eagle came down and dropped all the snakes and flew away. A relieved charmer thanked him profusely and conceded defeat.


During a pilgrimage towards the South, Swami Desika had to stay in a village with his deity Hayagriva. During midnight, a merchant came running to him and told him that a white horse was causing havoc to the grains in his warehouse and

that he was helpless. Swami understood that it was the act of Lord Hayagriva and offered milk to his deity. The horse disappeared at once and the heap of grains was saved. The merchant became his devotee and thenceforth became prosperous.

A poor bachelor once approached Swami Desika and sought financial help for his marriage. It was a time when our Acharya himself was living in penury. However, he wanted to somehow help the young man. He took the bachelor to the Thayar Sannidhi and spontaneously composed the hymn Sri Sthuthi. It started raining gold coins everywhere and the ever-ascetic Acharya asked the groom to take all of it and blessed him.

Once, a sculptor had the audacity to test Swami's skills in his art. He told the Acharya that he would make the base of Swami Desika's idol and that Swami himself was to carve out the form (Thirumeni). Both completed their assigned tasks but the sculptor was unable to fix the form to the base. He tried to overcome the problem by chiselling the idol but to his hor ror saw Swami's body bleed. The sculptor realised his folly and apologised for his act. Swami Desika rectified the error in the base and fixed the idol. The idol came out so exquisitely that Swami embraced it with joy and gave it to his son. Later, it was installed in the Thiruvaheendra Puram temple and it is the one which all of us worship even today.

Composing extra-ordinary philosophical works



establishing Visishtaadvaita was among the very purposes of his birth. Therefore, his astounding feats such as mastering of all studies before he was 20, composing the masterpiece Paadhuka Sahasram overnight, effortlessly winning numerous debates with scholars of alien faiths, etc. do not find elaboration above.

But what is truly amazing is that someone who was entrenched in tradition and orthodoxy, as our Acharya was, could possess such an expertise in different fields and conquer all-comers. The only explanation for this is the fact that Swami Desika was a divine incarnation of Venkatesa, the Lord of Seven Hills. Thus, he is much more than a versatile genius.

Let us salute and celebrate the colossus even as we marvel at his greatness!

(to be continued…)

ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.



முகவரி மற்றும் விவரங்களுக்கு:

'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'

9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,

மயிலாப்பூர், சென்னை – 600004.

☎ : 044 – 4322 9401.

GPAY மூலம் பணம் செலுத்தும் வசதி உள்ளது.

நிர்வாகம்: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.

ஸ்ரீ:

Swami Desika – Master of Analogy 6

100 Gems from Srimath Rahasya-thraya Saaram

Smt. Padmalatha Sridharan, Chennai

Analogical Gems 26 to 30

26. How one has to follow the rules of the game even when it is played for fun (Utharakruthya Adhikaaram):

அக்கரையிலே அபிமத தேசத்துக்குப் போக ஓடம் பார்த்திருப்பார், நினைத்த போது விடவொண்ணாத பணபந்த த்யூதத்தில் இழியாதே, வேண்டின மட்டிலே தலைக்கட்டுகைக்கு ஈடான விஹார த்யூதத்திலே இழிந்தாலும், த்யூத சாஸ்த்ரத்தின் படியே அடிதப்பாதே கருவி வைக்குமாப் போலே

This is a fantastic analogy and Swami Desika paints a beautiful word-picture of the way Prapannas have to conduct themselves after Prapathi. It is a given that Prapannas have to do Kainkaryams without aspiring for anything as the Kainkaryams themselves are the end rather than the means but it is extremely important to bear in mind that the Kainkaryams should be done according to the Saasthras only. Further, they should be undertaken relishingly and not as cumbersome duty.

For example, some people are sitting on the banks of the river awaiting the ferry to arrive from the other side and to while away the time, indulge in a game of cards or chess. If they were playing for money, they would not be able to quit as and when the boat arrives. So, they would ideally be playing for fun without stakes. Still, can they play mindlessly and in a haphazard manner? No. They would still have to comply with the rules of the game.

Similarly, Prapannas have a reserved place in Vaikuntam, across the Viraja River and they are awaiting the day of the Lord's Will for them to cross the ocean of Samsara. However, as long as their earthly sojourn is not ended, they have to play by the rules of the game, i.e., follow the path shown by the Saasthras.

That way, there will not be any delay once the day of reckoning approaches unlike the case wherein people do Kainkaryams to the Lord to get material things (In which case, the Karmas have to be continued till their fruition, like the game with stakes).

27. How a healthy person with a balanced diet enjoys the sweetness of milk much more than a person in ill-



health who has been advised to drink it for medicinal purposes (Utharakruthya Adhikaaram):

பித்த பரிஹாரார்த்தமாக க்ஷீரஸேவை பண்ணுவாரைப் போலன்றிக்கே அயத்ந லப்தமான ஔஷதத்தாலே அவிலம்பிதமாக ஆரோக்யம் பெற்றவர்கள் பால் வார்த்து உண்ணுமாப் போலே

This analogy is for the second part of the previous concept, namely, the need to do the Kainkaryams with no other objective but to seek the pleasure of the Lord. The Saasthras have laid down the Kainkaryams that are to be submitted to the Lord as per the time and place and the Prapannas are bound by them.

These are not to be looked upon as entailments but as opportunities to serve the Lord in the way He desires. When one performs the Kainkaryams without seeking anything from the Lord, he is much more likely to enjoy them than the one who does them expecting specific rewards.

28. How the abode of king-in-waiting is illuminated the night before the crowning (Utharakruthya Adhikaaram):

அபிஷேகம் பண்ணப் போகிற ராஜகுமாரனுக்கு ராத்ரியில் விளக்கேற்றி வைக்குமாப் போலே

If a prince were to be crowned as the king the next day, then, his palace would be lit up with extravagant lamps and it will be all glow and radiance the previous night. Similarly, for Prapannas, the world is

the dark place of Samsara and their Acharyas are the ones who with their luminous knowledge dispelled the darkness.

The coronation for the kingdom of Moksha is to take place in the future and till that time, one has to repeatedly acknowledge with gratitude the mercy of one's Acharya who is the sole reason for his good fortune. The Acharyan can never be repaid by any means. The least we can and must do is to serve our Acharyan with our mind, body, heart and soul.

29. How the king feels if his son is feted (Purushaarthakaashta Adhikaaram):

ராஜாவுக்கு ராஜகுமார உபலாலநம் போலே

This chapter of Purushartha kaashtaadhikaaram is devoted by Swami Desika to emphasise that Bhagavathas are more important than Bhagwan Himself and hence for our Kainkaryams to be complete, they should be submitted to Bhagavathas also. In short, the cornerstone of Kainkaryam to the Lord is Bhagavatha Kainkaryam.



Since Bhagavathas are close to his Heart, there is no contradiction of terms in that we are not paying obeisance to any other entity but to that of the Lord Himself. Just as the king is overjoyed to see his son being feted by his servants, and watches with pride and indulgence, Sriman Narayana is extremely pleased if we do service to the Bhagavathas.

30. How the king who receives many garlands and gifts distributes them to his servants and pets (Purushaarthakaashta Adhikaaram):

ஸ்வதந்த்ரனாய் ஸ்வச்சந்த லீலனான ராஜா, தான் பூண்ட ஆபரணத்தையும் இட்ட மாலையையும், அடியார்களுடையவும் ஆனை குதிரைகளுடையவும் கழுத்திலே இடுமாப் போலே

One might wonder as to how a Prapanna can accept another person albeit a Bhagavatha as his Master when he has already sworn his allegiance to the Lord alone. It is not only the Will of the Lord that we should treat other Bhagavathas as our Masters, but they are in fact our Masters in that they are the soul of the Lord Himself. ("Jnani tu atmaiva me matham" – I deem Jnani (the knowledgeable) to be Myself – Bhagavath Gita 7.18).

Since Sriman Narayana is our Master, He can use us in any manner He desires and he can subject us to other Masters too. Just as the King, who has received many garlands, gifts, etc., magnanimously distributes them to his servants and pets, the Lord ordains that a Bhagavatha be the Master of another and His Will prevails as He is the Absolute Master. To draw a contemporary parallel, we see that politicians distribute the Ponnadais (shawls) given to them to his underlings!

(to be continued…)

ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான
(G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

★ ★ ★

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை 600 004.
: +91 77086 53799 ☎ : 044 - 24953799, 044 - 43863747

ஸ்ரீ:



With Pranams:

R. Srinivasan
Block No. 6, 2B, Rani Meyyammai Towers,
MRC Nagar, Chennai - 600 028.

SVDD thanks **Sri R. Srinivasan**
for sponsoring this month's issue of Desika Sandesam





ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவ பந்தல்கால் முஹூர்த்தம்











கடை ச்ரவணம்